

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 230 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 18 – ஞாயிற்றுக்கிழமை 31 மார்ச் 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 230 : Thiruvalluvar Year - 2055 - Panguni 18 - Sunday 31 March 2024 - Madurai 12 Pages ₹ 5.00







## தமிழ்த்தோல் போர்த்தி வஞ்சித்து வருகிற

# பா.ஜ.க.வுக்கு ஏமாற்றத்தைப் பரிசாகத் தாரீர்!

## தமிழ்நாட்டு மக்களுக்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, மார்ச் 31–**

**”தமிழ்த் தோல் போர்த்தி வஞ்சித்து வருகிறது பா.ஜ.க.! எனவே பா.ஜ.க.வுக்கு ஏமாற்றத்தைப் பரிசாகத் தாரீர் என்று கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இதுகுறித்து திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் – முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டிருப்பதாவது:–



**“நேற்று மாலைச் செய்தி:**

தாய்மொழியாகத் தமிழ் வாய்க்க வில்லை என வருந்துகிறார் பிரதமர் மோடி!

**நேற்று காலைச் செய்தி:**

அழகிய தமிழ்ச்சொல் ‘வானொலி’ இருக்க ஆகாசவாணி என்பதே பயன்பாட்டுக்கு வரும்.

மோடியின் கண்ணீரை அவரது கண்களே நம்பாது! தமிழர்கள் எப்படி நம்புவார்கள்?

கெட்டிக்காரன் புளுகாவது எட்டு நாள் நிற்கும்; ஆனால், மோடியின் கண்ணீர்?

ஒருபக்கம் கண்ணைக் குத்திக் கொண்டே மறுபக்கம் கண்ணீர் வடிப்பது என்ன மாதிரியான தமிழ்ப் பாசம்?

கடந்த காலங்களில் தமிழ்நாட்டில் ஆங்கிலத்தில் பரப்புரை செய்த அவர் இப்போது இந்தியில் மட்டுமே பேசுவதன் மர்மம் என்ன?

**பிரதமர் மோடி அவர்களே…**

**கருப்புப் பணம் மீட்பு,**

**மீனவர்கள் பாதுகாப்பு,**

**2 கோடி வேலைவாய்ப்பு,**

**ஊழல் ஒழிப்பு போல்**

### இந்தியில் பேசும் மர்மம் என்ன?

**காற்றில் கரைந்த உங்கள் கேரண்டிகளில் ஒன்றுதான்,**

**அகவை ஐந்தான விமானங்களில் தமிழில் அறிவிப்பு!**

விமானங்களில் மட்டுமல்ல; தமிழ்நாட்டில் உள்ள விமான நிலையங்களில் கூட தமிழிலோ ஆங்கிலத்திலோ பேசும் பாதுகாப்புப் படையினர் இல்லை.

“எங்கும் இந்தி! எதிலும் இந்தி!” என மாற்றியதுதான் மோடி அரசின் அவலச் சாதனை!

தமிழ்த்தோல் போர்த்தி வரும் வஞ்சகர் கூட்டத்துக்கு ஏமாற்றமே பரிசாகும்!

இவ்வாறு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.

# பா.ஜ.க.வின் வரி பயங்கரவாதம்!

## ப.சிதம்பரம் கண்டனம்!

சென்னை, மார்ச் 31 –

தேர்தல் என்பது நியாயமாக நடத்தப்பட வேண்டும் என்பதையே ஜனநாயகம் வலியுறுத்துவதாக காங்கிரஸ் மூத்த தலைவரும் முன்னாள் ஒன்றிய அமைச்சருமான ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

ப.சிதம்பரம் வெளியிட்ட சமூக வலைதளப்பதிவில் கூறியிருப்பதாவது:–

தேர்தல் பத்திரங்கள் மூலம் 8 ஆயிரத்து 250 கோடி ரூபாய்க்கு பா.ஜ.க. ஊழல் செய்தது, நாட்டையே உலுக்கி உள்ளதாக கூறியுள்ளார். ஆளும் பா.ஜ.க. கட்சி தனது நண்பர்களிடம் இருந்து பெருமளவு நிதியை குவித்துவரும் வேளையில், வருமான வரித் துறையோ மிகப்பெரிய எதிர்க் கட்சியான காங்கிரசை மட்டுமே குறிவைப்பதுடன், ஆயிரத்து 800 கோடி ரூபாயை வரியாக கேட்பதாக குற்றம் சாட்டியுள்ளார்.



இந்த செயலானது, பொருளாதார ரீதியாக காங்கிரஸை முடக்கும் பா.ஜ.க.வின் போலி முயற்சிகளே தவிர, வேறொன்றும் இல்லை என்று குறிப்பிட்ட அவர், தேர்தலில் பா.ஜ.க.வுக்கு மக்கள் தக்க பதிலடி கொடுப்பார்கள் என தெரிவித்தார்.

ஒரு கட்சி பல்லாயிரம் கோடி பணத்தை கொள்ளையடிப்பதற்கு மத்தியில், எதிர்க்கட்சிகள் மீது வரி பயங்கரவாதத்தில் ஈடுபடுவது எப்படி நேர்மையான தேர்தலாக இருக்கும் என்று கேள்வி எழுப்பிய ப.சிதம்பரம், தேர்தல் என்பது நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடத்தப்பட வேண்டும் என்பதையே ஜனநாயகம் வலியுறுத்துகிறது, மாறாக வரி பயங்கரவாதத்தை அல்ல என்று தெரிவித்துள்ளார்.

**பேட்டி!**

காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு வருமான வரித்துறை நோட்டீஸ் அனுப்பியிருப்பது அனைத்துக் கட்சிகளுக்கும், பொதுமக்களுக்கும் விடுக்கப்பட்ட எச்சரிக்கை என முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் திருவாரூரில் அவர் கூறியதாவது:–

“தேர்தல் பத்திரங்கள் மூலம் கார்ப்பரேட் நிறுவனங்களிடம் ரூ.8,250 கோடியை வாங்கிய பா.ஜ.க., இப்பொழுது காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள் மீது வருமான வரி, வட்டி, அபராதம் உள்ளிட்டவற்றை விதிக்கிறது. இது அனைத்து கட்சிகளுக்கும் விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை அதற்கும் மேலாக மக்களுக்கும் இது ஒரு எச்சரிக்கை.

அனைத்துக் கட்சிகளையும் நாங்கள் ஒழித்து விடுவோம் என்றும், நாங்கள் மட்டும்தான் கட்சி நடத்த முடியும் என்றும் அவர்கள் எச்சரிக்கை விடுக்கிறார்கள். ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பது உண்மையில் ஒரே நாடு, ஒரே கட்சி ஆகும். அந்த எச்சரிக்கை அனைவருக்கும் விடுக்கப்பட்டிருக்கிறது. மக்கள் விழித்துக்கொள்வார்கள்.

இவ்வாறு முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் பேட்டியளித்தார்.


## ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# புதுடெல்லியில் இன்று ‘இந்தியா’ கூட்டணி ஆர்ப்பாட்டம்!

*புதுடெல்லி, மார்ச் 31-*

*நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சிகளை முடக்கிவரும் ஒன்றிய பாஜ.க. அரசைக் கண்டித்து தலைநகர் டெல்லியில் இந்தியா கூட்டணி சார்பில் இன்று (31.03.2024) பிரமாண்ட ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.*

*நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சிகளை முடக்க விசாரணை அமைப்புகளை பயன்படுத்தி மோடி அரசு அனைத்து அட்டூழியங்களையும் செய்து வருகிறது. டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், ஜார்கண்ட் முதலமைச்சர் ஹேமந்த் சோரனை சிறையில் அடைத்துள்ளனர். காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்குகளை முடக்கி உள்ளனர். ஒன்றிய பா.ஜ.க. அரசின் சர்வாதிகார நடவடிக்கையை கண்டித்து இந்தியா கூட்டணி கட்சிகள் சார்பில் தலைநகர் டெல்லியில் இன்று பிரம்மாண்ட ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. டெல்லி ராம்லீலா மைதானத்தில் நடக்கும் போராட்டத்தில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி, இந்திய கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் டி.ராஜா, தி.மு.க. மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி சிவா மற்றும் முக்கியத் தலைவர்களும் பங்கேற்க இருக்கின்றனர். மேலும், இந்தியா கூட்டணி கட்சிகளின் தொண்டர்கள் சுமார் ஒரு லட்சம் பேர் போராட்டத்தில் கலந்து கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*




# மேலும் ரூ.10 ஆயிரம் கோடி பத்திரங்களை விற்க திட்டம்!

## மோடி அரசின் தேர்தல் பித்தலாட்டம் அம்பலமானது!

புதுடெல்லி, மார்ச் 31 –

தேர்தல் பத்திரங்கள் மூலம் மிகப்பெரிய ஊழலில் ஈடுபட்ட மோடி அரசு, மேலும் ரூ.10 ஆயிரம் கோடிக்கான தேர்தல் பத்திரங்களை விற்பனை செய்ய திட்டமிட்டிருந்தது தற்போது அம்பலமாகி உள்ளது.

உச்சநீதிமன்றத்தின் தலையீட்டால் தேர்தல் பத்திர விவரங்களை வெளியிட வேண்டிய கட்டயாம் எஸ்.பி.ஐ. வங்கிக்கு ஏற்பட்டது. தேர்தல் பத்திரங்கள் மூலம் தனியார் நிறுவனங்களை மிரட்டி பா.ஜ.க. அரசு கோடிக் கணக்கில் பணம் பறித்தது அம்பலமானது.

இதனிடையே, நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, மேலும் 10 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள தேர்தல் பத்திரங்களை விற்பனை செய்ய ஒன்றிய நிதி அமைச்சகம் திட்டமிட்டிருந்தது.

முதற்கட்டமாக அச்சடிக்கப்பட்ட எட்டாயிரத்து 350 பத்திரங்களை கடந்த பிப்ரவரி 23 ஆம் தேதி எஸ்.பி.ஐ. வங்கியிடம் வழங்கியிருந்தது. தேர்தல் பத்திரங்கள் சட்டவிரோதமானது என்று உச்சநீதிமன்றம் தடை விதித்ததால், வேறு வழியின்றி தேர்தல் பத்திர விற்பனையை ஒன்றிய அரசு நிறுத்தியது. இந்த விவரங்கள் அனைத்தும், தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் ஒன்றிய அரசின் பித்தலாட்டங்கள் தற்போது அம்பலமாகி உள்ளது.

பா.ம.க. கொள்கைக்கு முற்றிலும் எதிரான கட்சி பா.ஜ.க.! சமூகநீதி பேசும் மருத்துவர் ராமதாசு பா.ஜ.க.வுடன் கைகோர்த்த மர்மம் என்ன?

# சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்த ராமதாசுக்கு மோடி கேரண்டி கொடுத்தாரா?

## தருமபுரி மாவட்டம் - தடங்கம் பிரச்சாரக் கூட்டத்தில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.3.2024) தருமபுரி மாவட்டம், தடங்கம்பகுதியில் நடைபெற்ற 'இந்தியா' கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் தர்மபுரி வேட்பாளர் ஆ.மணி அவர்களையும், கிருஷ்ணகிரி வேட்பாளர் கோபிநாத் அவர்களையும் அறிமுகப்படுத்தி 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், அமைச்சர் பெருமக்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், அர.சக்கரபாணி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் செல்வகணபதி, தடங்கம் சுப்பிரமணி, பிரகாஷ், பழனியப்பன், மதியழகன், நாடாளுமன்ற உறுப்பினர் செந்தில் குமார், சட்டமன்ற உறுப்பினர் இராமச்சந்திரன், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் தங்கபாலு, ஒருங்கிணைந்த தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் 'இந்தியா' கூட்டணி நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

**தருமபுரி, மார்ச் 31 -**

**சமூகநீதி பேசும் மருத்துவர் ராமதாஸ் அவர்கள், சமூகநீதிக்கு எதிரான பா.ஜ.க.வுடன் கைகோர்த்த மர்மம் என்ன? எனவும், சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்த ராமதாஸ் அவர்களுக்கு மோடி கேரண்டி கொடுத்தாரா? என்றும், பா.ம.க. வலியுறுத்தும் ஒரு கொள்கைக்குக்கூட ஆதரவு தெரிவிக்காத, அதற்கு முற்றிலும் நேர் எதிரான கொள்கை கொண்டதுதான் பா.ஜ.க! எனவும் தருமபுரி மாவட்டம் தடங்கத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய - கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

நேற்றுமுன்தினம்(29-03-2024) தருமபுரி மாவட்டம், தடங்கம் பகுதியில் நடைபெற்ற 'இந்தியா' கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பரப்புரைப் பொதுக் கூட்டத்தில், தருமபுரி மக்களவைத் தொகுதி கழக வேட்பாளர் ஆ.மணி அவர்களையும், கிருஷ்ணகிரி மக்களவைத் தொகுதி காங்கிரஸ் கட்சி வேட்பாளர் கோபிநாத் அவர்களையும் அறிமுகப்படுத்தி, இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு எழுச்சியுரையாற்றினார்.

கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு: -

அவ்வைக்கு நெல்லிக்கனியைக் கொடுத்த வள்ளல் அதியமான் வாழ்ந்த இயற்கை எழில் சூழ்ந்த தகடூர் என்று வரலாற்றில் போற்றப்படும் தருமபுரி மண்ணிற்கு வந்திருக்கிறேன். அதேபோல், சையத் பாட்சா கோட்டை என்பதை அமைத்து மாபெரும் போர் நடைபெற்ற இடம் கிருஷ்ணகிரி! இதுவும் போர்க்களம் தான்! ஜனநாயகப் போர்க்களம்! பாசிச மதவெறி கொண்ட பா.ஜ.க., இந்தியா என்ற அழகிய நாட்டை அழித்துவிடாமல் தடுக்க - ஜனநாயகச் சக்திகளும் - இந்திய நாட்டு மக்களும் - களம் கண்டுள்ள ஜனநாயகப் போர்க்களம்!


நாம் நடத்த இருக்கும் இரண்டாவது விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்குக் கட்டியம்கூறும், இந்த பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்றிருக்கும் உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

இந்த எழுச்சிமிகு தேர்தல் பரப்புரைக் கூட்டத்தை மாநாடுபோல், ஏற்பாடு செய்திருக்கும் அமைச்சர் பெருமக்கள் - 'வேங்கையின் மைந்தன்' என்று என்னால் பாசத்தோடு அழைக்கப்படும், எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களுக்கும், ஆற்றல்மிகு அமைச்சர் செயல்வீரர் சக்கரபாணி அவர்களுக்கும், மாவட்டக் கழகச் செயலாளர்களுக்கும், கழக நிர்வாகிகளுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றி!

தருமபுரி தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிடும் ஆ.மணி அவர்கள் கழகத்தின் ஆற்றல்மிகு தொண்டர்! மக்களுக்காக வாதாடும் வழக்கறிஞர்! மாவட்டத் துணைச்செயலாளராக இருக்கும் அவரது குரல் நாடாளுமன்றத்தில் ஒலிக்க "உதய சூரியன்" சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்!

கிருஷ்ணகிரி காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடும் கோபிநாத் அவர்கள், அவரே சொன்னது போல, 2001, 2006, 2011 ஆகிய மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். மக்கள் செல்வாக்கைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டவர். அவரையும் உங்கள் நன்மைக்காக நாடாளுமன்றத்திற்கு அனுப்ப "கை" சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்.

நடக்க இருப்பது, இந்திய வரலாற்றிலேயே மிகமிக முக்கியமான தேர்தல்! இந்தத் தேர்தலில் இந்தியா கூட்டணிக்கு நீங்கள் அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் - ஜனநாயகத்திற்கும் - தமிழ்நாட்டின் எதிர்காலத்திற்கும் - இளைய தலைமுறையினருக்கும் - எதிர்கால சந்ததியினருக்கும் - அளிக்கும் வாக்கு! இந்தியாவில் சமூக நீதி நீடிக்க வேண்டும் என்றால், ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றால், வேற்றுமையில் ஒற்றுமை தொடர வேண்டும் என்றால், எங்கும் சமத்துவம் தழைக்க வேண்டும் என்றால், அரசியல்சட்டம் காப்பாற்றப்பட வேண்டும் என்றால், நம் நாட்டின் பன்முகத்தன்மையைப் பறைசாற்றும் இந்திய தேசியக் கொடி கம்பீரமாக தில்லி செங்கோட்டையில் பறக்க வேண்டும் என்றால், முதலில் பா.ஜ.க. ஆட்சியை வீட்டிற்கு அனுப்ப வேண்டும்! இந்தியா கூட்டணியை ஆட்சியில் அமர்த்த வேண்டும்!



**நடக்க இருப்பது, இந்திய வரலாற்றிலேயே மிகமிக முக்கியமான தேர்தல்! இந்தத் தேர்தலில் இந்தியா கூட்டணிக்கு நீங்கள் அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் – ஜனநாயகத்திற்கும் – தமிழ்நாட்டின் எதிர்காலத்திற்கும் – இளைய தலைமுறையினருக்கும் – எதிர்கால சந்ததியினருக்கும் – அளிக்கும் வாக்கு! இந்தியாவில் சமூகநீதி நீடிக்க வேண்டும் என்றால், ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றால், வேற்றுமையில் ஒற்றுமை தொடர வேண்டும் என்றால், எங்கும் சமத்துவம் தழைக்க வேண்டும் என்றால், அரசியல்சட்டம் காப்பாற்றப்பட வேண்டும் என்றால், நம் நாட்டின் பன்முகத்தன்மையைப் பறைசாற்றும் இந்திய தேசியக் கொடி கம்பீரமாக தில்லி செங்கோட்டையில் பறக்க வேண்டும் என்றால், முதலில் பா.ஜ.க. ஆட்சியை வீட்டிற்கு அனுப்ப வேண்டும்! இந்தியா கூட்டணியை ஆட்சியில் அமர்த்த வேண்டும்!**

### சமூக நீதிக்கு சவக்குழி தோண்டும் பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது!

பா.ஜ.க. என்பது சமூகநீதிக்குச் சவக்குழி தோண்டும் கட்சி! சமத்துவம் என்றால், கிலோ என்ன விலை என்று கேட்கும் கட்சி! நம்முடைய நாட்டை மத - இன - சாதி - மொழி அடிப்படையில் பிளவுபடுத்திக் குளிர் காய வேண்டும் என்று நினைக்கும் கட்சிதான் பா.ஜ.க.! அப்படிப்பட்ட, பா.ஜ.க.வை மீண்டும் ஆட்சிக்கு வரவிடாமல் தடுக்கும் கடமை, சமூகநீதி மண்ணான தமிழ்நாட்டுக்குத்தான் அதிகம் உண்டு!

ஆனால், நான் பெரிதும் மதிக்கும் சமூகநீதி பேசும் அய்யா டாக்டர் ராமதாஸ் அவர்கள் எங்கே இருக்கிறார் என்று உங்களுக்குத் தெரியும்! சமூகநீதிக்கு எதிரான பா.ஜ.க.வுடன் - சமூக நீதி பேசும் அய்யா ராமதாஸ் அவர்கள் எப்படி கூட்டணி வைத்தார் என்பது, ஏதோ தங்கமலை இரகசியமெல்லாம் கிடையாது... இந்த தருமபுரி மக்களுக்கு நன்றாகவே தெரியும்! அவர் ஏன் மனதில்லாமல் அங்குச் சென்றிருக்கிறார் என்று உங்களுக்கு மட்டுமல்ல - அவர்கள் கட்சியினருக்கும் தெளிவாகத் தெரியும்! இதற்குமேல் நான் விளக்கமாகச் சொல்ல விரும்பவில்லை!

ஒன்றிய அரசு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும். ஒட்டுமொத்தமாகப் பிற்படுத்தப்பட்ட - மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின - பழங்குடியின மக்களின் சமூக நீதியைக் காப்பாற்றும் அரசை ஒன்றியத்தில் அமைக்க வேண்டும் என்று இந்தியா கூட்டணியை வலுவாக அமைத்திருக்கிறோம். அந்த வகையில், 'இந்தியா' கூட்டணி, மக்களின் நலனுக்காக - மக்களுக்காகவே பாடுபடும் கட்சி களின் கூட்டணியாக கம்பீரமாக உங்களுக்காகக் களத்தில் போராடுகிறோம்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அடிக்கடி கூறுவார்... "எனக்கென்று சாதிப்பெருமை கிடையாது. மிகமிக பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவன். எனக்கென்று குடும்பப் பாரம்பரியம் கிடையாது. ராவ் பகதூர், திவான் பகதூர் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்று கூறும் பெருமை எனக்கில்லை. கல்லூரிப் பட்டம் எனக்கில்லை. நான் புகுந்ததெல்லாம் ஈரோட்டுப் பள்ளியும் - காஞ்சிக் கல்லூரியும்தான்! நான் பட்டம் பெறாதவன் என்றாலும், பகுத்தறிவுப் பணியாளன்! சாதிப்பெருமை இல்லை என்றாலும் அண்ணாவின் நீதியே என் சாதியென மதிப்பவன் நான்" என்று முத்தமிழறிஞர் கலைஞர் கூறுவார்.


### பிற்படுத்தப்பட்டோர் – ஆதிதிராவிடர் நலத்துறை உருவாக்கியவர் கலைஞர்!

தன்னை ஒரு சாமானியன் என்று அறிவித்துக் கொண்டு, சாமானிய மக்களுக்காக ஆட்சி நடத்தினார் தலைவர் கலைஞர். 1969-இல் முதன்முதலாக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை - ஆதிதிராவிடர் நலத்துறை என்று அந்த மக்கள் பயனடையத் தனித்தனியாகத் துறையை உருவாக்கியவர் தலைவர் கலைஞர்தான். பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கான சட்டநாதன் ஆணையத்தை அமைத்தார். அந்த ஆணையத்தின் பரிந்துரைப்படி, சமூகநீதிக்குப் புதிய பாதை அமைத்தார். கொங்கு வேளாள கவுண்டர் சமுதாயத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தார். கல்வி, வேலைவாய்ப்புகளில் பல்வேறு வாய்ப்புகள் கிடைத்து,

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்



வேலூர் கோட்டை மைதானத்தில் வருகிற 2ந்தேதி நடைபெறும் பொதுக் கூட்டத்தில் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்ய வருகை தரும் முதலமைச்சர், மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கும் விழா மேடையினை கழக பொதுச்செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் ஆய்வு செய்தார். உடன் அரக்கோணம் நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் எஸ்.ஜெகத்ரட்சகன், மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன், எம்.எல்.ஏ, தலைமைச் செயற்குழு உறுப்பினர் டாக்டர் வி.எஸ். விஜய் மாநகராட்சி மேயர் சுஜாதா, துணை மேயர் எம்.சுனில் குமார், கதிரேசன், முனவர் பாஷா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



# நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமனுக்குப் பணம் இல்லாததால் நிற்கவில்லையாம்!

# தேர்தல் பத்திரம் மூலம் பா.ஜ.க. வாங்கிய ரூ. 12 ஆயிரம் கோடி எங்கே?

## தடங்கத்தில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... - 2ஆம் பக்கத் தொடர்ச்சி



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.3.2024) தருமபுரி மாவட்டம், தடங்கம்பகுதியில் நடைபெற்ற 'இந்தியா' கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் தர்மபுரி வேட்பாளர் ஆ.மணி அவர்களையும், கிருஷ்ணகிரி வேட்பாளர் கோபிநாத் அவர்களையும் அறிமுகப்படுத்தி இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், அமைச்சர் பெருமக்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சக்கரபாணி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் செல்வகணபதி, தடங்கம் சுப்பிரமணி, பிரகாஷ், பழனியப்பன், மதியழகன், நாடாளுமன்ற உறுப்பினர் செந்தில் குமார், சட்டமன்ற உறுப்பினர் இராமசந்திரன், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் தங்கபாலு, ஒருங்கிணைந்த தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் 'இந்தியா' கூட்டணி நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

கொங்கு வேளாள கவுண்டர் சமூகத்தினர் இன்று முன்னேறி இருப்பதற்கு இதுதான் அடிப்படைக் காரணம்!

மற்றொன்றையும் பெருமையுடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆதிதிராவிட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு 18 விழுக்காடும் – பழங்குடியினருக்கு 1 விழுக்காடும் – இடஒதுக்கீடு வழங்கி, அவர்களின் முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக இருந்தவர் தலைவர் கலைஞர் தான்!

### வன்னியர் சங்கத்தினர் மீது போடப்பட்ட வழக்குகளை திரும்பப் பெற்றார் கலைஞர்!

நம்முடைய திராவிட மாடல் அரசுதான், புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்தநாளைச் சமத்துவ நாளாக அறிவித்தோம்! ஆதிதிராவிடர் பழங்குடியினர் ஆணையத்தைப் புதுப்பித்தோம். பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்காக ஒதுக்கப்படும் நிதி, வளர்ச்சித் திட்டங்களுக்கு முறையாகச் செலவழிக்கப்படுவதைக் கண்காணிக்க தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டுச் செயல்திட்டச் சட்டம் கொண்டுவந்ததும் தி.மு.க. அரசுதான். இப்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களைக் கல்வி, பொருளாதார மற்றும் சமூக நிலைகளில் உயர்த்த அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு கவனத்துடன் மேற்கொண்டு வருகிறது.

வன்னியர் சமுதாய மக்கள் 1987–ஆம் ஆண்டை மறந்திருக்க மாட்டார்கள்! தனி இடஒதுக்கீடு கேட்டுக் கடுமையான போராட்டம் நடந்த ஆண்டு அது! ஆனால், அ.தி.மு.க. ஆட்சியில் தனி இடஒதுக்கீடு கொடுக்கவில்லை! தலைவர் கலைஞர் 1989–ஆம் ஆண்டு முதலமைச்சரானதும், ஆட்சிக்கு வந்த 43–வது நாளில் வன்னியர் சமூகம் உள்ளிட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்கு 20 விழுக்காடு இடஒதுக்கீட்டை கொடுத்தார். இந்த முப்பதாண்டு காலத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயங்களைச் சேர்ந்த குடும்பங்களின் வாழ்க்கையில் ஒளியேற்றிய இடஒதுக்கீடுதான் அது!

வன்னியர் சங்கத்தினர் மேல் போடப்பட்டிருந்த வழக்குகளைத் திரும்பப் பெற்றார் தலைவர் கலைஞர்! 1987–ஆம் ஆண்டு போராட்டத்தில் உயிரிழந்த 21 பேர் குடும்பத்திற்கு, மூன்று இலட்சம் ரூபாய் கருணைத் தொகை கொடுத்தவர் தலைவர் கலைஞர். இன்றைக்கும் அந்தக் குடும்பங்கள் மாதம் 3 ஆயிரம் ரூபாய் பென்ஷன் பெறுகிறார்கள்.

சமூகநீதித் தியாகிகளான அவர்களைப் போற்றி மணிமண்டபம் கட்டப்படும் என்று விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் நான் வாக்குறுதி கொடுத்தேன். இன்றைக்கு விழுப்புரத்தில் அந்த மணிமண்டபம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது! விரைவில் திறக்கப்பட இருக்கிறது. சொன்னதைச் செய்த பெருமையுடன் நான் உங்கள் முன்னால் வாக்கு கேட்டு நிற்கிறேன்.

இந்த நேரத்தில் சில பேர் மறந்துபோன, மறைக்க நினைக்கும் வரலாற்று நிகழ்ச்சிகளை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

### அய்யா ராமதாஸ் அவர்களே அன்று பேசியது மறந்து போச்சா?

கோனேரிக்குப்பத்தில் நடந்த வன்னியர் சங்க வெள்ளிவிழா மாநாட்டிற்கு, தலைவர் கலைஞரை அழைத்தார் அய்யா ராமதாஸ் அவர்கள்! அய்யா ராமதாஸ் அவர்களே அன்றைக்கு மேடையில் என்ன பாராட்டிப் பேசினீர்கள் என்று ஞாபகம் இருக்கிறதா? நீங்கள் மறந்தாலும் வன்னிய சமுதாய மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்! 1987–ஆம் ஆண்டுமுதல் இடஒதுக்கீட்டிற்காக நாங்கள் போராடினோம், 21 உயிர்களைப் பலி கொடுத்ததைத் தவிர ஒன்றும் நடக்கவில்லை. அன்றைக்கு இருந்த அ.தி.மு.க. முதலமைச்சரைப் பார்க்கவே முடியவில்லை! ஆனால் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தார். வந்தவுடன் என்னை அழைத்து இடஒதுக்கீடு தந்த கலைஞர் அவர்களே! உங்களுக்கு நன்றி! இந்த சமுதாயம் என்றென்றும் உங்களுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் மட்டும் 20 விழுக்காடு இடஒதுக்கீடு தரவில்லை என்றால், இங்கு மத்திய அமைச்சர் சொன்னதைப்போல், கூலி வேலை செய்துவிட்டு, ஓட்டு மட்டும் போடும் ஒரு சமுதாயமாக இந்த ஒடுக்கப்பட்ட சமுதாயம் இருந்திருக்கும். அதை மாற்றிய பெருமை, கலைஞர் அவர்களையே சாரும் என்று சொன்னீர்களே, அத்தகைய சாதனையைச் செய்த இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

### இராமசாமி படையாச்சியாருக்கு சென்னையில் சிலை வைத்தது யார்?

கடந்த தேர்தலில் அ.தி.மு.க. – பா.ம.க. கூட்டணி முறிந்ததும், அ.தி.மு.க.வும் – பா.ம.க.வும் மாறி மாறி, அவர்கள் ஆட்சியில் வழங்கிய இட ஒதுக்கீடு பற்றி, குற்றம் சொல்லுகிறார்களே? என்னவெல்லாம் பேசுகிறார்கள் என டி.வி.யில் பார்க்கிறோமே! அதையெல்லாம் இப்போது சொல்லி, இந்த மேடையின் கண்ணியத்தைக் குறைத்துக் கொள்ள நான் விரும்பவில்லை!

மரியாதைக்குரிய இராமசாமி படையாச்சியார் அவர்களுக்கு, சென்னையில் சிலை வைக்க வேண்டும் என்று வாழப்பாடி ராமமூர்த்தி அவர்களும் – வன்னிய அடிகளார் அவர்களும் – சி.என்.ராமமூர்த்தி அவர்களும் கலைஞரைச் சந்தித்துக் கோரிக்கை வைத்தபோது, சென்னை ஹால்டா சந்திப்பில் சிலை அமைத்தார் தலைவர் கலைஞர். அந்த நிகழ்ச்சியில், கலைஞருடன் சென்னை மேயராக இந்த அடியேனும் கலந்து கொண்டேன். எந்தச் சமூகமாக இருந்தாலும் அந்தச் சமூகத்தின் மேன்மைக்காகத் திட்டங்களைத் தீட்டித் தரும் சமூகநீதி இயக்கம்தான் தி.மு.க. ஆனால் சமூகநீதி பேசும் மருத்துவர் அய்யா அவர்கள், சமூகநீதிக்கு எதிரான பா.ஜ.க.வுடன் கை கோத்த மர்மம் என்ன? பா.ம.க. வலியுறுத்தும் ஒரு கொள்கைக்குக்கூட ஆதரவு தெரிவிக்காத, அதற்கு முற்றிலும் நேர் எதிரான கொள்கை கொண்டதுதான் பா.ஜ.க! இது, மூத்த தலைவரான மருத்துவர் ஐயாவுக்குத் தெரியாதா? நான் மட்டும் இதைச் சொல்லவில்லை, மனசாட்சி உள்ள பா.ம.க.வின் தொண்டர்கள்கூட இதை ஜீரணிக்க முடியாமல் வேதனையோடு இருக்கிறார்கள்! அய்யா ராமதாஸ் அடிக்கடி பேசுவாரே, மண்டல் கமிஷன் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்தியபோது நாட்டில் திட்டமிட்டு எப்படியெல்லாம் கலவரம் செய்தது பா.ஜ.க! சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் ஆட்சியையே பா.ஜ.க. கவிழ்த்ததே!

### இட ஒதுக்கீட்டை குளோஸ் செய்ய படுபாதகங்களைச் செய்யும் பா.ஜ.க.!

இப்போதுகூட, பிற்படுத்தப்பட்ட – பட்டியலின – பழங்குடி மக்களின் இடஒதுக்கீட்டை முழுமையாக 'குளோஸ்' செய்வதற்காக எவ்வளவு படுபாதகங்களை பா.ஜ.க. செய்திருக்கிறது அதை மறந்துவிட்டாரா? பா.ம.க.வின் சார்பில், இப்போது தேர்தல் அறிக்கையில் அய்யா ராமதாஸ் என்ன சொல்லி இருக்கிறார்? 2021–இல் நடந்திருக்க வேண்டிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, இந்த ஆண்டு இறுதியிலே நடக்கிறது. அப்போது இந்தியா முழுவதும் மக்கள் தொகைக் கணக்கெடுப்போடு, சாதிவாரி கணக்கெடுப்பையும் சேர்த்து நடத்தப் பா.ம.க. பாடுபடும் என்று சொல்கிறார்கள்! நாம் கேட்பது, தன்னுடைய ஆட்சிக் காலத்தில் பிரதமர் நரேந்திர மோடி இதை ஏன் செய்யவில்லை என்று கேட்டாரா? இப்போதாவது இந்தக் கோரிக்கையைப்

தொடர்ச்சி 4- ஆம் பக்கம்

**கோனேரிக்குப்பத்தில் நடந்த வன்னியர் சங்க வெள்ளிவிழா மாநாட்டிற்கு, தலைவர் கலைஞரை அழைத்தார் அய்யா ராமதாஸ் அவர்கள்! அய்யா ராமதாஸ் அவர்களே... அன்றைக்கு மேடையில் என்ன பாராட்டிப் பேசினீர்கள் என்று ஞாபகம் இருக்கிறதா? நீங்கள் மறந்தாலும் வன்னிய சமுதாய மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்! "1987–ஆம் ஆண்டுமுதல் இடஒதுக்கீட்டிற்காக நாங்கள் போராடினோம், 21 உயிர்களைப் பலி கொடுத்ததைத் தவிர ஒன்றும் நடக்கவில்லை. அன்றைக்கு இருந்த அ.தி.மு.க. முதலமைச்சரைப் பார்க்கவே முடியவில்லை! ஆனால் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தார். வந்தவுடன் என்னை அழைத்து இடஒதுக்கீடு தந்த கலைஞர் அவர்களே! உங்களுக்கு நன்றி! இந்த சமுதாயம் என்றென்றும் உங்களுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் மட்டும் 20 விழுக்காடு இடஒதுக்கீடு தரவில்லை என்றால், இங்கு மத்திய அமைச்சர் சொன்னதைப்போல், கூலி வேலை செய்துவிட்டு, ஓட்டு மட்டும் போடும் ஒரு சமுதாயமாக இந்த ஒடுக்கப்பட்ட சமுதாயம் இருந்திருக்கும். அதை மாற்றிய பெருமை, கலைஞர் அவர்களையே சாரும்" என்று சொன்னீர்களே, அத்தகைய சாதனையைச் செய்த இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.**

## நாடாளுமன்றத் தேர்தல் – கழகத் தலைவர்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்றைய பிரச்சாரம்!



2024 ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரித்து வருகிறார்.

கழகத் தலைவர் அவர்கள் மேற்கொள்ளும் இன்றைய தேர்தல் பிரச்சாரப் பயண விவரம் :-

| தேதி | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|
| 31.03.2024 (ஞாயிற்றுக்கிழமை) | - ஈரோடு<br>நாமக்கல்<br>கரூர் |



விருதுநகர் தி.மு.க. கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் தேர்தலுக்கு சிவகாசியில் வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் மற்றும் நிதி மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தேர்தல் அலுவலகத்தை திறந்து வைத்தார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் மாணிக்கம், தாகூர், சிவகாசி மேயர் சங்கீதா இன்பம், துணை மேயர் விக்னேஷ் பிரியா காளீஸ்வரன், மாநில வர்த்தக அணி வனராஜ், சட்ட மன்ற உறுப்பினர் அசோகன், சிவகாசி மாநகர செயலாளர் உதய சூரியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் ஜெகத்ரட்சகனை ஆதரித்து கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி விளாப்பாக்கம் பேரூராட்சியில் வாக்குச் சேகரித்தார். உடன்வேட்பாளர் எஸ்.ஜெகத்ரட்சகன், மாவட்ட இளைஞர்அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ, மாவட்ட அவைத் தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, ஆற்காடு தொகுதி தேர்தல் பொறுப்பாளர் டாக்டர் அபிசுல்லா, (காங்கிரஸ்) பஞ்சாட்சரம், மக்கள் நீதி மையம் இம்ரான், திமிரி மேற்கு ஒன்றிய செயலாளர் ரமேஷ், நகர செயலாளர் ஏ.வி.சரவணன், பாபு, ஒன்றிய செயலாளர் பாண்டுரங்கன் மற்றும் கழகத்தினர் கலந்துகொண்டனர்.

# உங்கள் வாக்கு இந்தியாவை - தமிழ்நாட்டைக் காப்பதாக இருக்கட்டும் உங்கள் ஸ்டாலின் அழைக்கிறேன்... நாடும் நமதே! நாற்பதும் நமதே!

## தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... - 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

பிரதமர் ஏற்று இருக்கிறாரா? மோடி அவர்கள் இப்போது கேரண்டி கேரண்டி என்று விளம்பரப்படுத்துகிறாரே? சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்த உங்களுக்கு கேரண்டி கொடுத்தாரா?

மோடி கேரண்டியில், இடஒதுக்கீட்டின் வரம்பை உயர்த்துவதற்கான உறுதிமொழி உண்டா? அய்யா ராமதாஸ் அவர்கள் மோடியிடமோ, அமித்ஷாவிடமோ அதற்கான உத்தரவாதத்தைப் பெற்று இருக்கிறாரா? இன்னும் சொல்ல வேண்டும் என்றால், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் எடுக்கப்பட்ட சாதிவாரிக் கணக்கெடுப்பைக்கூட வெளியிடாமல் முட்டுக்கட்டை போட்டதுதான் பா.ஜ.க.

இன்று இந்திய அளவில், நம்முடைய கோரிக்கையை ஏற்று, சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தவும், இடஒதுக்கீடு விழுக்காட்டை அதிகரிக்கும் வாக்குறுதி அளித்திருக்கும் ஒரே தேசிய கட்சி காங்கிரஸ். மல்லிகார்ஜுன கார்கே அவர்கள் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் அதை வாக்குறுதியாகத் தந்திருக்கிறார். பா.ஜ.க. தேர்தல் அறிக்கையில் அந்த மாதிரி வாக்குறுதி உண்டா? அருமைச் சகோதரர் ராகுல் காந்தி அவர்கள் செல்லும் இடமெல்லாம் இதைப் பற்றி பேசுகிறாரே?

இதைச் சொன்னால், நீங்களே ஏன் நடத்தவில்லை என்று நம்மை கேட்கிறார்! நாம் மீண்டும் மீண்டும் சொல்வது, சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்பது, அரசியலமைப்புச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டு, எடுக்கப்பட வேண்டியது! அதற்கான அதிகாரம் ஒன்றிய அரசிடம்தான் இருக்கிறது! மாநில அரசால் சர்வேதான் எடுக்க முடியும்! சென்சஸ் எடுக்க முடியாது! இந்த நடைமுறையெல்லாம் சமூகநீதிப் போராளியான அய்யா ராமதாஸ் அவர்களுக்கு தெரியாது என்று நான் நினைக்கவில்லை! தெரிந்தே, இந்த அரசியலை நடத்துகிறார்! அவர் மேல் வைத்திருக்கும் பெரும் மரியாதைக்காக இதற்கு மேல், நான் எதுவும் பேச விரும்பவில்லை!

### மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி பல மணிநேரம் நின்று கொண்டே வழங்கினேன்!

யார் என்ன சொன்னாலும், பேரறிஞர் அண்ணா வழியில், ”வாழ்க வசவாளர்கள் என்று நம்முடைய திராவிட மாடல் பணிகளைத் தொடர்ந்து கொண்டிருக்கிறோம் அதனால்தான், இன்றைக்கு உங்கள் குடும்பங்களில் ஒருவனாக – உங்களில் ஒருவனாக – நான் இருக்கிறேன். இதற்கு தருமபுரியும் மிக முக்கியக் காரணம்! நான் எங்குச் சென்றாலும் தாய்மார்களும், சகோதரிகளும் என்னிடம் பாசத்தோடும், மகிழ்ச்சியோடும் உரிமையோடும் பேச வைத்தது மகளிர் சுய உதவிக் குழுக்கள்தான்! ஏன் என்றால், அந்தக் குழுக்களுக்கான சுழல்நிதியைப் பல மணிநேரம் நின்றுக்கொண்டே வழங்கியவன்தான் இந்த ஸ்டாலின்!

அதே மாதிரிதான், இன்றைக்கு நான் கொண்டுவந்திருக்கும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில், எங்கள் அண்ணன் ஸ்டாலின் தாய்வீட்டுச் சீர் மாதிரி மாதா மாதம் ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார் என்று ஒரு கோடியே 15 இலட்சம் சகோதரிகள் சொல்கிறார்கள் என்றால், அதற்கான விண்ணப்பங்கள் கொடுக்கும் பணியைத் தொடங்கி வைக்க நான் தேர்ந்தெடுத்த ஊரும் இதே தருமபுரிதான்!

எனக்கு தாய்மார்கள் மனதில், அவர்கள் குடும்பத்தில் ஒருவனாக நினைக்க வைத்து, பாசப் பாலத்தை அமைத்தது, இந்த தருமபுரிதான்! இதுமட்டுமல்ல, நம்முடைய திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற இந்த மூன்று ஆண்டுகளில், நிறைவேற்றிய திட்டங்களில் சிலவற்றை மட்டும் சொல்ல வேண்டும் என்றால்,

### மூன்றாண்டு ஆட்சியில் நிறைவேற்றிய சிலவற்றை மட்டும் சொல்கிறேன்!

**● காலையில் பள்ளிக்கு வரும் குழந்தைகள் வெறும் வயிற்றுடன் இருக்கக் கூடாது, நன்றாகச் சாப்பிட்டு – நன்றாகப் படிக்க வேண்டும் என்று முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.**

**● நாங்கள் ஆட்சிக்கு வந்ததில் இருந்து, தினமும் இலட்சக்கணக்கான மகளிர் மகிழ்ச்சியாக, நாங்கள் ஸ்டாலின் அய்யா பஸ்சில், இலவசமாகப் பயணம் செய்கிறோம் என்று சொல்லும் விடியல் பயணம் திட்டம்!**

**● வெளியூரில் வேலைக்குச் செல்லும் மகளிர் பாதுகாப்பாகத் தங்குவதற்கு, தோழி விடுதி திட்டம்!**

**● அடுத்து, பெண் பிள்ளைகளுக்கு மாதா மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப் பெண் திட்டம்!**

**● மாணவர்களுக்கும் மாதா மாதம் ஆயிரம் ரூபாய் வழங்க இருக்கும் தமிழ்ப் புதல்வன் திட்டம்!**

**● இளைஞர்களுக்கு, திறன் பயிற்சி வழங்கி வேலைவாய்ப்பு பெற்றுத் தரும், நான் முதல்வன் திட்டம்!**

இப்படி, பள்ளிக் குழந்தைகள் முதல் கல்லூரிக்குச் செல்லும் மாணவ – மாணவிகள் வரை, பயன்பெறும் ஏராளமான திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம்.

### திராவிட மாடல் ஆட்சியை மற்ற மாநிலங்களும் பின்பற்றுகின்றன!

இந்தத் திட்டங்களால் ஒவ்வொரு பெண்ணும், ஒவ்வொரு மாணவியும், ஒவ்வொரு மாணவனும், ஏன், தமிழ்நாட்டில் இருக்கும் ஒவ்வொரு குடும்பமும் பயனடைகிறார்கள் என்று நெஞ்சை நிமிர்த்திப் பெருமையுடன் சொல்வேன்! அதனால்தான் நம்முடைய திராவிட மாடல் திட்டங்களை, மற்ற மாநிலங்களும் பின்பற்றும் நல்லாட்சியை வழங்கி வருகிறோம்!

இந்த நல்லாட்சி, இந்தியா கூட்டணி மூலமாக, தில்லியிலும் நடக்க வேண்டும் என்றுதான், பல்வேறு வாக்குறுதிகளைத் தேர்தல் அறிக்கையாக வழங்கியிருக்கிறோம். சாதனைகளாக மாறப்போகும் அந்த வாக்குறுதிகளில் சிலவற்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

**● பத்தாண்டுகளாகச் சாமானிய மக்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்கள் என்று கொஞ்சமும் நினைத்துப் பார்க்காமல், மக்கள் விரோத பா.ஜ.க. அரசால் தொடர்ந்து உயர்த்தப்பட்ட பெட்ரோல், டீசல், கேஸ் விலை குறைக்கப்படும்!**

**● சிறுபான்மையின மக்களுக்கு எதிரான சட்டங்கள் ரத்து செய்யப்படும்!**

**● தொழிலாளர் விரோதச் சட்டங்கள், மறுசீரமைப்பு செய்யப்படும்!**

**● ஜி.எஸ்.டி. சட்டத்தில் சீர்திருத்தம் செய்யப்படும்.**

# தமிழ்நாட்டின் நல்லாட்சிபோன்று ‘இந்தியா’ கூட்டணி மூலம் டெல்லியிலும் நடக்க வேண்டும்!

**● விவசாயிகள் கூட்டுறவு அமைப்புகளிலும் – வங்கிகளிலும் வாங்கியிருக்கும் கடனும் – வட்டியும் தள்ளுபடி செய்யப்படும்.**

**● உழவர்களின் வேளாண் விளை பொருட்களுக்கு மொத்த உற்பத்தி செலவுடன் பிளஸ் ஐம்பது விழுக்காடு என்பதை வலியுறுத்தி, குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்யப்படும்.**

**● நாட்டைப் பாதுகாத்த இந்திய ஆயுதப் படையினரின் ஓய்வூதியம் மற்றும் பிற நிதிப் பலன்கள் உயர்த்தப்படும்.**

**● தேசிய நெடுஞ்சாலைகளில் இருக்கும் சுங்கச் சாவடிகள் முற்றிலுமாக அகற்றப்படும்.**

**● மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் வேலை நாட்கள் 100–ல் இருந்து, 150 நாட்களாகவும், ஊதியம் 400 ரூபாயாகவும் உயர்த்தப்படும்.**

**● வங்கிகளில் மினிமம் பேலன்ஸ் இல்லாத போது விதிக்கப்படும் அபராதம் நீக்கப்படும்.**

**● தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களில் வசிக்கும் ‘வால்மீகி‘ இன மக்கள் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள்.**

**● அதேபோல், ‘குன்னுவார்’ இனமக்களும் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள்.**

**● ஓசூரில் புதிய விமான நிலையம் அமைக்கப்படும்.**

**● ஜ்ஜேவாடி முதல் சிப்காட்–II வரை பறக்கும் சாலைப் பாலம் அமைக்கப்படும்.**

**● கிருஷ்ணகிரியில் இரயில் நிலையம் அமைக்கப்படும்.**

**● ஜோலார்பேட்டை, ஓசூர் இரயில் சேவை கிருஷ்ணகிரி வழியாகத் தொடங்கப்படும்.**

**● ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் விரிவு படுத்தப்படும்.**

**● ஓசூர், கிருஷ்ணகிரி, சென்னை இரயில் சேவை தொடங்கப்படும்.**

**● சிப்காட்டில் மானியத்துடன்கூடிய ஐம்பது ஏக்கர் நிலத்தை விசைத்தறித் தொழில் வளர்ச்சிக்கு ஒதுக்கித் தர ஆவன செய்யப்படும்.**

**● ஓசூரில் இருந்து பெங்களூருக்கு மெட்ரோ இரயில் சேவை தொடங்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.**

**● ஓசூர், தளி சாலையில் இரயில் மேம்பாலம் அமைக்க ஆவன செய்யப்படும்.**



**● மொரப்பூர் இரயில் நிலையத்தையும், தருமபுரி இரயில் நிலையத்தையும் இணைக்கும் வகையில் புதிய அகல இரயில் பாதை அமைக்கப்படும்.**

இது எல்லாவற்றிற்கும் மேல், முக்கியமாக, சாதிவாரிக் கணக்கெடுப்பும், வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மக்கள் குறித்த கணக்கெடுப்பும், ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரே நேரத்தில், ஒன்றிய அரசால் எடுக்கப்படும்.

நாம் ஆட்சிக்கு வந்தால் என்ன செய்வோம் என்று, இப்படி சொல்வதுபோல் பா.ம.க. அங்கம் வகிக்கும் பா.ஜ.க. ஆட்சியில் தமிழ்நாட்டிற்குப் பத்து ஆண்டுகள் செய்த சிறப்புத் திட்டங்கள் என்ன? என்று சொல்ல முடியுமா? பிரதமர் மோடி தமிழ்நாட்டிற்கு வரும்போது சிறப்புத் திட்டங்களைச் சொல்லுங்கள் என்று தொடர்ந்து கேட்கிறோம்? ஒரு மாதமாக நான் கேட்கிறேன். பிரதமரிடம் அதற்கு பதில் இல்லை!

### சிறப்புத் திட்டங்களை நாம் பட்டியலிட முடியும்! பா.ஜ.க.வால் முடியுமா?

ஒன்றிய அரசில் பங்கு வகித்த தி.மு.க. தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்த சிறப்புத் திட்டங்கள் என்ன என்று சமீபத்தில் பட்டியல் போட்டுச் சொன்னேன்

**தமிழ் செம்மொழியாக அறிவிப்பு!**

**ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்!**

**சேலத்தில் புதிய இரயில்வே கோட்டம்!**

**சென்வாட் வரி நீக்கம்!**

வரிசையாக நிறைய பட்டியல் போட்டேன் அதுமாதிரி, தமிழ்நாட்டுக்கான சிறப்புத் திட்டங்களை மட்டும் பட்டியல் போடுங்கள் என்றுதான் கேட்கிறோம். ஒன்று கூட பா.ஜ.க.வினால் சொல்ல முடியவில்லை! சிறப்புத் திட்டத்தின் இலட்சணம்தான் இப்படி என்றால், பொதுவான திட்டங்களாக இருந்தாலும் – மாநிலத்திற்குச் சேர வேண்டிய நிதியாக இருந்தாலும் – தமிழ்நாடு கொடுக்கும் வரிக்கு ஏற்ற மாதிரியான நிதி யாவது வருகிறதா? அதுவும் இல்லையே!

பா.ஜ.க. ஆட்சியில் இருக்கும் உத்தரப் பிரதேசம், ஒரு ரூபாய் கொடுத்தால், டபுள் மடங்காக நிதியைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, தமிழ்நாட்டிற்கு மட்டும் ஒரு ரூபாய் கொடுத்தால், வெறும் 29 பைசா மட்டும் திருப்பி கொடுப்பது ஓரவஞ்சனை இல்லையா?

### ஜி.எஸ்.டி.யால் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நலிந்து போகும் தொழில்கள்!

அதுமட்டுமா, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருக்கும், சிறு – குறு தொழில் நிறுவனங்கள் ஜி.எஸ்.டி.யால் எப்படி நலிந்து போயிருக்கிறார்கள்? அசோக் லேலண்டு, டி.வி.எஸ், ஹோண்டா, டொயோட்டா போன்ற நிறுவனங்களுக்கு உதிரி பாகங்கள் தயாரித்து வழங்கும் 2500 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ஓசூரில் இருக்கின்றன. இந்த உதிரிபாகங்களுக்கும் 28 விழுக்காடு ஜி.எஸ்.டி போட்டு, அந்த நிறுவனங்கள் எல்லாம் பாடா படுது! இவர்களுக்காக நீங்கள் என்றைக்காவது கவலைப்பட்டதுண்டா?

மூன்று வேளாண் சட்டங்கள் கொண்டு வந்து, அதை எதிர்த்த விவசாயிகளை ஏதோ தீவிரவாதிகளைப்போல் எப்படி கொடுமைப்படுத்தினீர்கள்? இன்றைக்கும் தலைநகர் தில்லியில் விவசாயிகளை நுழைய விடாமல் சாலை முழுவதும் ஆணி அடித்தீர்களே! விவசாயிகளுக்கு நீங்கள் செய்யும் கொடுமை மாதிரி, இந்திய வரலாற்றிலேயே எந்தப் பிரதமரும் செய்திருக்க மாட்டார்கள்... ஏன், உலக வரலாற்றில்கூட, எந்த சர்வாதிகாரியும் செய்திருக்க மாட்டார்கள்!

### மோடி அவர்களே நீங்கள் எஜமானர் அல்ல மக்கள் தான் எஜமானர்கள் என்பதை மறவாதீர்!

பிரதமர் மோடி அவர்களே உங்கள் பத்தாண்டுகால ஆட்சியின் அடையாளம் என்ன? ரஃபேல் ஊழல், சி.ஏ.ஜி. ஊழல், தேர்தல் பத்திர ஊழல் இதற்கெல்லாம் பதில் எங்கே? இதற்கெல்லாம் தேர்தலுக்குப் பின், நீங்கள் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். 12 ஆண்டு காலம் குஜராத் முதலமைச்சராக இருந்து, மாநில உரிமைகளைப் பேசிய மோடி, தில்லிக்குச் சென்று பிரதமரானதும், மாநிலங்களை அழிக்கத் துடியாகத் துடிக்கிறார். மாநிலங்களுக்கு என்று எந்த அதிகாரங்களும் இருக்கக் கூடாது. மொத்த அதிகாரமும் தன்னுடைய பாக்கெட்டில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று சர்வாதிகாரியைப்போல் நினைக்கிறார்.

பிரதமர் மோடி அவர்களே நீங்கள் எஜமானர் அல்ல! மக்கள்தான் உங்களுக்கு எஜமானர்கள்! அதை மறந்துவிடாதீர்கள்! ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்! இன்னமும் மக்களிடம் நீங்கள் வாக்கு கேட்டு வருகிறீர்கள்! நீங்கள் எப்படிப்பட்ட தோல்வி பயத்தில் இருக்கிறீர்கள் என்று, சிலிண்டர் விலையைக் குறைக்கும்போதே தெரிந்துவிட்டதே! ஆண்டுதோறும்தான், மகளிர் தினம் வருகிறது, அப்போதெல்லாம் குறைக்காதவர், தேர்தல் வருகிறது என்று இந்த வருடம் குறைக்கிறார்! சிலிண்டர் விலையை உயர்த்தியது யார்? இப்போது குறைப்பதாக நாடகம் நடத்தும் அதே மோடிதான்!

தேர்தல் வந்ததால் பெட்ரோல், டீசல் விலையைக் குறைக்கிறார். பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தியது யார்? அதுவும், இப்போது குறைப்பதாக நாடகம் நடத்தும் அதே மோடிதான்!

நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டு, நடத்தை விதிகள் அமலில் இருக்கிறது! அரசு புதியதாக எதையும் அறிவிக்கக் கூடாது! ஆனாலும், நூறு நாள் வேலைத் திட்டத்திற்கான ஊதியத்தை உயர்த்துவதாக அறிவித்திருக்கிறார்கள். மக்கள் மேல் ஏன் இந்த திடீர் கரிசனம்? பாசம்? இரக்கம்? பிரதமர் மோடி அவ்வளவு இரக்கமும் – பாசமும் உடையவர் என்றால், கிராமத்தில் வாழும் ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என்று காங்கிரஸ் கொண்டு வந்த இந்த திட்டத்தை இவ்வளவு நாள் ஏன் முடக்கி வைத்தீர்கள்? காங்கிரஸ் கொண்டு வந்தால் என்ன, ஏழை மக்களுக்குதானே பயன்படுகிறது என்று, ஒரு அடிப்படை மனிதாபிமானத்துடன் செய்தீர்களா? இல்லையே?

அப்படி என்றால், இந்த திட்டத்தை முடக்கியதற்கு காரணம், காங்கிரஸ் மேல் இருக்கும் வன்மம் மட்டுமல்ல! ஏழை மக்களை வஞ்சிக்கும், எண்ணம்தான் காரணம்! எப்படியெல்லாம் நூறு நாள் வேலைத்திட்டத்தைச் சீரழித்தார்கள்! அந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்குவதில் முக்கியத்துவம் அளிக்கவில்லை! ஒதுக்கப்பட்டு வந்த நிதியையும், ஓரவஞ்சனையுடன் குறைத்தீர்கள்! இன்னும் சொல்ல வேண்டும் என்றால், ஆண்டுக்குச் சராசரியாக நாற்பது நாட்கள் மட்டுமே வேலை கொடுத்து, இந்தத் திட்டத்தின் நோக்கத்தையே சிதைத்து, சின்னாபின்னப்படுத்தினார்கள்.

### ஏழைகளுக்கான திட்டங்களை சீரழித்து கார்ப்பரேட்களுக்கு கம்பளம் விரிக்கும் மோடி!

கார்ப்பரேட்களுக்கு ரத்தினக் கம்பளம் விரிக்கும் மோடி அரசு, இரத்தம் சிந்தி உழைக்கும் ஏழைகளுக்கு, உதவியாக இருக்கும் திட்டத்தை சீரழித்து வேடிக்கை பார்த்தது. நம்முடைய தேர்தல் அறிக்கையில் சொன்னதைப் பார்த்து, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரிக்கு 294 ரூபாயிலிருந்து, 319 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள்! அடேங்கப்பா, மக்கள் மேல் எவ்வளவு அக்கறை! அவ்வளவு அக்கறை இருக்கிறவர், இதையெல்லாம் தேர்தலுக்கு முன்னால் ஏன் செய்யவில்லை? ஏன் என்றால், இதெல்லாம் கண்துடைப்பு நாடகம்!

திரும்பவும் நாங்கள் உறுதியோடு சொல்கிறோம். 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தில், வேலைவாய்ப்பு நாட்களை, 150 நாட்களாக உயர்த்தி, ஊதியத்தையும் 400 ரூபாயாக உயர்த்துவோம்!

நேற்று ஒரு செய்தி பார்த்தேன். நம்முடைய மக்களுக்கு வெள்ள பாதிப்பின்போது, நிவாரணம் கொடுத்ததைப் பிச்சை என்று சொன்னார்களே, அமைச்சர் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் பேசிய செய்தி! இவர்கள் பிச்சை என்று சொன்னதும், நான் என்ன சொன்னேன்? நிர்மலா சீதாராமன் அவர்களே ஒருமுறையாவது மக்களை வந்து சந்தித்துப் பாருங்கள் மக்கள் உங்களுக்குச் சொல்லும் பதிலில், ’பிச்சை’ என்ற சொல்லே இனி உங்கள் ஞாபகத்திற்கு வராது என்று சொன்னேன்.

ஆனால், வேட்பாளர் பட்டியலில் அவர்கள் பெயர் இல்லை! ஏன் போட்டியிடவில்லை என்பதற்கு அவர் சொன்ன காரணம்தான் சூப்பர்! தேர்தலில் போட்டியிட அவரிடம் பணம் இல்லை என்று சொல்லியிருக்கிறார். சொல்வது யார்? சாதாரண மக்களின் பேங்க் பேலன்ஸ் குறைவாக இருந்தால் அபராதம் விதிக்கிறவர்கள் சொல்கிறார்கள்! இவரிடம் பணம் இல்லை என்றால் 12 ஆயிரம் கோடி தேர்தல் பத்திரமாக வாங்கி பா.ஜ.க. வேட்பாளர்கள் நிற்கிறார்களே? அந்தப் பணம் என்ன ஆனது? உங்களுக்குத் தர முடியாது என்று சொல்லிவிட்டார்களா? யாரைக் குற்றம்சாட்டுகிறார்?

### தேர்தலில் நின்றால் மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் என்ற பயம்!

அம்மையார் அவர்களே, தேர்தலில் போட்டியிட மக்களைச் சந்திக்க வேண்டும்! மக்களுக்காக உழைக்கத் தெரிய வேண்டும்! மக்களைப் பற்றிய உண்மையான அக்கறை இருக்க வேண்டும்! உங்களுக்கே தெரிந்துவிட்டது! தேர்தலில் நின்றால், மக்கள் உங்களுக்குத் தக்க பாடம் புகட்டுவார்கள் என்று, தப்பிவிட்டீர்கள்!

தமிழ்நாட்டு மக்கள் 2019 தேர்தலைப் போன்று, இந்தத் தேர்தலிலும் பா.ஜ.க.வை ஒதுக்கத்தான் போகிறார்கள்! பா.ஜ.க.வுடன் வெளிப்படையாகக் கூட்டணி அமைத்திருப்பவர்களும், கள்ளக் கூட்டணியாகத் தமிழ்நாட்டிற்கு துரோகமிழைக்கும் பழனிசாமி கூட்டமும் தோற்கடிக்கப்பட வேண்டும்.

பா.ஜ.க.வையே விமர்சிக்காமல் பா.ஜ.க.வுக்கு எதிரான கூட்டணி என்று வசனம் பேசுகிறார் ’கொடநாடு புகழ்’ பழனிசாமி! பதவி சுகத்தை அனுபவிக்க, நம்முடைய தமிழ்நாட்டு மாணவர்களை நீட் தேர்வை எழுத வைத்தார்!

மூன்று வேளாண் சட்டங்களை ஆதரித்தார். அதுமட்டுமல்ல, எந்த விவசாயி பாதிக்கப்படுகிறார், நான் விவாதம் நடத்தத் தயாராக இருக்கிறேன் என்று உழவர்களின் துயரத்தைப் பார்த்து ஏகடியம் செய்து, பச்சைத் துண்டு போட்டு பச்சைத் துரோகம் செய்தவர்தான் பழனிசாமி.

### பா.ஜ.க.வின் மக்கள் விரோத திட்டங்களை ஆதரித்த தமிழ்நாட்டின் துரோகி பழனிசாமி!

குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை ஆதரித்தார். அதிலும், எந்த முஸ்லிம் பாதிக்கப்படுகிறார் என்று, அட்டர்னி ஜெனரல் மாதிரி ’லா பாய்ண்ட்’ எல்லாம் பேசினார் பழனிசாமி. பா.ஜ.க. கொண்டு வரும் எல்லாவற்றையும் ஆதரித்து அவர்கள் பாதம்தாங்கியாக இருந்து, மோடி – அமித்ஷா இரட்டையருக்கு பவுசாகப் பல்லக்கு தூக்கிய, தமிழ்நாட்டு துரோகிதான் பழனிசாமி.

இப்போது புதியதாகத் தமிழ்நாட்டை மீட்கப் போகிறாராம். இதைக் கேட்டு தமிழ்நாட்டு மக்கள் சிரிக்கிறார்கள். பா.ஜ.க.விடம் இருந்து சிறுபான்மை மக்களைக் காக்கப் போகிறாராம். இதைக் கேட்டுச் சிறுபான்மை மக்களும் சிரிக்கிறார்கள். தமிழ்நாட்டைப் பாழ்படுத்திய அ.தி.மு.க. – தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க. – அதனுடன் சந்தர்ப்பவாதக் கூட்டணி அமைத்துள்ள பா.ம.க. என்று இந்த மக்கள் விரோதக் கூட்டத்தை தோற்கடிக்க வேண்டும்!

அதற்கு, இந்தியா கூட்டணி வேட்பாளர்கள், தருமபுரி நாடாளுமன்றத் தொகுதி திராவிட முன்னேற்றக் கழக வெற்றி வேட்பாளர் மணி அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்திலும், கிருஷ்ணகிரி நாடாளுமன்றத் தொகுதி காங்கிரஸ் கட்சியின் வெற்றி வேட்பாளர் கோபிநாத் அவர்களுக்கு கை சின்னத்திலும் உங்களது பொன்னான வாக்குகளை அளித்து வெற்றி பெற வையுங்கள்.

உங்கள் வாக்கு, இந்தியாவைக் காப்பாற்றும் வாக்காக அமையட்டும். தமிழ்நாட்டைக் காக்கும் வாக்காக அமையட்டும். ஜனநாயகத்தைக் காக்கும் வாக்காக அமையட்டும். பாசிசத்தை வீழ்த்த ஜனநாயகத்தைக் காக்க – உங்கள் ஸ்டாலின் அழைக்கிறேன். நாற்பதும் நமதே! நாடும் நமதே! நாற்பதும் நமதே! நாடும் நமதே!

இவ்வாறு கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி உறுதி!

# கலைஞரின் 101-வது பிறந்த நாள் பரிசாக 40-க்கு 40 தொகுதிகள் வெற்றியை சமர்ப்பிப்போம்!

## திருவள்ளூர் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை!

**திருவள்ளூர், மார்ச் 31-**

**திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், பொன்னேரியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு திருவள்ளூர் நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் சசிகாந்த் செந்திலுக்கு ஆதரவாக வாக்கு சேகரித்தார்.**

**அப்போது, அவர் நாடாளுமன்றத் தேர்தலில் 'இந்தியா' கூட்டணி வெற்றி உறுதியாகிவிட்டது. கலைஞரின் 101 வது பிறந்த நாள் பரிசாக 40க்கு 40 தொகுதிகள் வெற்றி பெற்று, கலைஞரின் காலடியில் அந்த வெற்றியை சமர்ப்பிப்போம் என்று சூளுரைத்தார்.**

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது.

தொடர்ந்து ஆறு நாட்களாகப் பிரச்சாரம் செய்து கொண்டிருப்பதால், எனக்குத் தொண்டை கட்டிக் கொண்டிக்கிறது. இருந்தாலும், இவ்வளவு சிறப்பான எழுச்சியான, உற்சாகமான வரவேற்பு அளித்த உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



### 'இந்தியா' கூட்டணி, வெற்றிக் கூட்டணி!

திருவள்ளூர் நாடாளுமன்றத் தொகுதி, இந்த பொன்னேரி சட்டமன்றத் தொகுதியில் நமது வெற்றிக் கூட்டணி, இந்தியா கூட்டணியின் சார்பாக திருவள்ளூர் தொகுதியில் போட்டியிடுகின்ற நம் கூட்டணிக் கட்சி காங்கிரஸ் பேரியக்கத்தின் வெற்றி வேட்பாளர் முத்தமிழறிஞர் கலைஞரின் ஆசியைப் பெற்ற வேட்பாளர், அன்னை சோனியா காந்தி அவர்களின் அன்பைப் பெற்ற வேட்பாளர், என் அருமைச் சகோதரர் ராகுல் காந்தி அவர்களின் ஆதரவைப் பெற்ற வேட்பாளர், நம் தமிழ்நாட்டு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அன்பையும் ஆதரவையும் பெற்ற வேட்பாளர், எல்லாவற்றைவிடவும் முக்கியம் இங்கு இருக்கக்கூடிய திருவள்ளூர் நாடாளுமன்ற வாக்காளப் பெருமக்கள் உங்களின் அன்பையும் ஆதரவையும் பெற்ற வேட்பாளர் அருமைச் சகோதரர் சசிகாந்த் செந்தில் அவர்களுக்கு நம் வெற்றிச் சின்னமாம் கை சின்னத்தில் வாக்கு கேட்க நான் வந்திருக்கிறேன்.

### வாழ்த்தி அனுப்பினார்கள்!

முதலில் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். இந்த உச்சிவெயிலில் இவ்வளவு சிறப்பான வரவேற்பு அளித்திருக்கிறீர்கள். கிட்டத்தட்ட நான் ஒரு 10.45 மணிக்கு வந்திருக்க வேண்டும். ஆனால், வரும் வழியெல்லாம் முழுக்க முழுக்கப் பொது மக்களின் வரவேற்பு, கழகத்தினரின் வரவேற்பு, கூட்டணிக் கட்சிகளின் வரவேற்பு, வண்டியை நிறுத்தி `நீங்கள்தான் வெற்றி பெறப் போகிறீர்கள்', `தி.மு.க கூட்டணி வெற்றி பெறப்போவது உறுதி', `இந்தியா கூட்டணி வெற்றி பெறப்போவது உறுதி', 'நரேந்திர மோடி வீட்டுக்குப் போவது உறுதி. நீங்கள் தைரியமாகப் போங்கள்' என்று என்னை வாழ்த்தி அனுப்பினார்கள். அதனால்தான் வருவதற்குக் கொஞ்சம் தாமதமாகிவிட்டது.

இருந்தாலும், இந்த உச்சி வெயிலைப் பொறுத்துக் கொண்டு, இந்த உச்சவெயிலைவிட உக்கிரமாக இந்த ஒன்றிய அரசை விரட்டியே தீர்வோம் என்று இவ்வளவு எழுச்சியோடு கூடியிருக்கிறீர்களே அதற்கு முதலில் என்னுடைய நன்றி.

### குறைந்தது 5 லட்சம் வாக்குகள்!

சென்ற 2019- ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின் போது இதே இடத்தில் நான் என் பிரச்சாரத்தை மேற்கொண்டேன். அப்போது நம் அண்ணன் காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த வேட்பாளர் ஜெயக்குமார் அவர்களுக்கு மூன்று லட்சத்தை 57 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுக் கொடுத்தீர்கள். அதற்கு, முதலில் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், இந்த முறை அந்த மூன்று லட்சத்து 57 ஆயிரம் வாக்குகள் பத்தாது.

சென்ற முறை நம் எதிரிகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து வந்தார்கள். இன்றைக்கு எல்லோரும் பிரிந்து பிரிந்து நிற்கிறார்கள். குறைந்தது 5 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் நம் வெற்றி வேட்பாளர் சசிகாந்த் செந்தில் அவர்களை கை சின்னத்தில் வாக்களித்து நீங்கள் மிகப்பெரிய வெற்றியை கொடுக்க வேண்டும்.

### வாக்குறுதி கொடுக்கிறேன்!

நான் இப்போது உங்களுக்கு ஒரு சவால் கொடுக்கிறேன். நீங்கள் குறைந்தது 5 லட்சம் வாக்கு வித்தியாசத்தில் கை சின்னத்தில் வாக்களித்து சகோதரர் சசிகாந்த் செந்தில் அவர்களை நீங்கள் நாடாளுமன்றத்திற்கு அனுப்பிவிட்டீர்கள் என்றால், நான் உங்களுக்கு வாக்குறுதி கொடுக்கிறேன், மாதம் இரண்டு நாள் நான் இங்கே வந்து திருவள்ளூர் பகுதியில் தங்கி, உங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து, உங்கள் மாவட்டச் செயலாளருடன் சேர்ந்து முதலமைச்சரிடம் கொண்டு சென்று இந்த நாடாளுமன்றத் தொகுதிக்கு என்னென்ன தேவையோ அத்தனை தேவைகளையும் நான் உறுதி செய்து கொடுக்கிறேன். இப்போது நான் வாக்குறுதி கொடுத்துவிட்டேன். கண்டிப்பாக நீங்கள் செய்தீர்கள் என்றால், என் வாக்குறுதியை நான் காப்பாற்றுவேன்.

கையைக் காட்டிச் சொல்லுங்கள், என்ன சின்னம், கை சின்னம்! ஏப்ரல் 19 -ஆம் தேதி வாக்குச்சாவடிக்குச் செல்கிறீர்கள். உங்கள் கண்ணுக்குத் தெரியப் போவது இரண்டே இரண்டு விஷயங்கள்தான். ஒன்று, நம் வெற்றிச் சின்னமாம் கூட்டணிச் சின்னம் 'கை' சின்னம். அதே போல, நம் வெற்றி வேட்பாளர் சசிகாந்த் செந்தில் அவர்களின் பெயர். இந்த இரண்டையும் பார்த்து, நீங்கள் போடுகிற வாக்கு, ஒன்றியப் பிரதமர் நரேந்திர மோடி ஆட்சிக்கு வைக்கும் வேட்டு.

### திறமையான வேட்பாளர்!

2021-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் பிரச்சாரத்திற்கு வந்திருந்தேன். அப்போது நம் கழகக் கூட்டணி வேட்பாளர் அண்ணன் துரை சந்திரசேகர் அவர்களுக்கு வாக்குச் சேகரிக்க வந்திருந்தேன். கிட்டத்தட்ட பத்தாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் அவரையும் நீங்கள் வெற்றி பெற வைத்தீர்கள். அதற்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த முறை நான் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், சகோதரர் ராகுல் காந்தி அவர்களுக்கும் மிகுந்த நன்றி சொல்லியே ஆக வேண்டும். ஏனென்றால், சிறந்த திறமையான வேட்பாளரை, இளைஞர் வேட்பாளரை உங்களிடம் ஒப்படைத்து இருக்கின்றனர்.

### தொகுதிக்காகப் பாடுபடுவார்!

இன்னும் செல்லப்போனால்ம் சகோதரர் சசிகாந்த் செந்தில் சாதாரணமானவர் கிடையாது. நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள், அவருக்கு இது முதல் தேர்தல் என்று. கிடையாது அவர் ஏற்கெனவே கர்நாடகாவில் பா.ஜ.க-வின் கண்ணில் விரலை விட்டு ஆட்டியவர்தான். அப்படிப்பட்ட ஒரு நல்ல வேட்பாளரை, திருவள்ளூர் தொகுதிக்கு நம் கூட்டணிக் கட்சிக்கு கை சின்னத்தில் போட்டி போட, திருவள்ளூருக்கு வாய்ப்பளித்ததற்கு சகோதரர் ராகுல் காந்தி அவர்களுக்கும், அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், நம் தலைவருக்கும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் அத்தனை பேரும் உங்கள் நன்றியைத் தெரிவிக்க வேண்டும். ஏனென்றால், ஒரு மிகச் சிறந்த நல்ல வேட்பாளரை உங்களிடம் ஒப்படைத்திருக்கின்றனர். கண்டிப்பாக இவர் வெற்றி பெற்றால், இந்தத் தொகுதிக்காகப் பாடுபடுவார். இந்த பொன்னேரி சட்டமன்றத் தொகுதியில் கடந்த மூன்று வருடத்தில் சில பணிகளைச் செய்திருக்கிறோம். அதை மட்டும் இந்த நேரத்தில் நான் உங்களிடம் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

### 37 தார் சாலைகள், 33 சிமெண்ட் சாலைகள்!

பொன்னேரி தொகுதியில் 13 கோடியே 27 லட்சம் மதிப்பீட்டில் 37 தார் சாலைகள், 33 சிமெண்ட் சாலைகள், 62 பேவர் பிளாக் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. பொன்னேரிக்கு நீண்ட நாள் நிலுவையில் இருந்த ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடப் பணிகள் 42 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. பெரியபாளையம் பவானி அம்மன் திருக்கோவில் பக்தர்களின் வசதிக்காக திருமண மண்டபம், பக்தர்கள் தங்குமிடம் உள்ளிட்ட வசதிகளுக்காக 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆரணி ஆற்றின் கறைகள் இருபுறங்களிலும் கான்கிரீட் சுவர்கள் அமைக்கும் பணி 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீனவர்களின் நலனுக்காக 29 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்ட முகத்துவாரப் பணிகள் நிறைவேறப்பட உள்ளன. பொன்னேரி சின்ன காவானம் இடையே 100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், மீஞ்சூர் திருப்பாலைவானம் இடையே கிட்டத்தட்ட 70 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் இரயில்வே மேம்பால பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 55 கோடி ரூபாய் மதிப்பிலான பொன்னேரி பாதாள சாக்கடைப் பணிகள் கிட்டத்தட்ட 99 சதவிகிதம் முடிவடைந்துள்ளன. அது விரைவில் பயன்பாட்டுக்கு வர உள்ளது.

### 'செய்வதைத்தான் சொல்வார்'

இப்போது இந்தத் தொகுதிக்கான வாக்குறுதிகளைச் சொல்கிறேன். நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒவ்வொரு தேர்தலின் போதும் தேர்தல் அறிக்கையை வெளியிட்டு விட்டுச் சொல்வார். 'சொல்வதைச் செய்வோம் செய்வதைத்தான் சொல்வோம்' என்று. அவ்வாறு செய்து கட்டிய தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவரின் வழியில் வந்த நம் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும் சொல்வதைத்தான் செய்வார், செய்வதைத்தான் சொல்வார்.

தேர்தல் அறிக்கையில் இந்தப் பகுதிக்குச் சில வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறார். அதில் சில வாக்குறுதிகளை மட்டும் இங்கே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். பொன்னேரி அரசு மருத்துவமனை அனைத்து வசதிகளுடன் முதல் தரமான மருத்துவமனையாக மாற்றி அமைக்கப்படும். அனைத்து குக்கிராமங்களுக்கும் பேருந்து வசதி விரிவுபடுத்தப்படும்.

குடிநீர்ப் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும். தொகுதியைச் சுற்றியுள்ள அனைத்துத் தொழிற்சாலைகளிலும் இளைஞர் மற்றும் பெண்களுக்கு 50 சதவிகித வேலை வாய்ப்பை உறுதி செய்து தருவோம். மாதவரம் அல்லது விம்கோ நகரில் இருந்து மெட்ரோ இரயில் சேவை மீஞ்சூர் வரை நீட்டிக்கப்படும். பாரம்பரிய மீனவ சமுதாய மக்கள் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள்.

### தேசிய மீனவர் நல ஆணையம்!

மீனவர்கள் நலம் காக்க தேசிய மீனவர் நல ஆணையம் அமைக்கப்படும். இயற்கைச் சீற்ற நேரங்களில் ஆழ்கடலில் மீனவர்கள் மாயமாவதைத் தடுக்க தடையற்ற தொலைத்தொடர்பு வசதி ஏற்படுத்தித் தரப்படும்.

100 நாள் வேலை திட்டத்தில் கொடுக்க வேண்டிய தொகையை ஒன்றிய அரசு குறைத்துவிட்டது. பா.ஜ.க, அ.தி.மு.க.காரர்கள் வரும் போது அதுகுறித்து அவர்களிடம் கேள்வி கேளுங்கள்.

நம் தலைவர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி திட்டம், புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், முதலமைச்சரின் காலைச் சிற்றுண்டி திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் என ஐந்து கையெழுத்துக்களைப் போட்டு அந்தத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். இந்தத் திட்டங்களை மட்டும் மக்களிடம் கூறி நம் பிரச்சாரத்தைத் தொடர வேண்டும்.

நான் ஒன்றிய அரசு, பா.ஜ.க அரசு 29 பைசாவைக் கேள்வி கேட்கிறேன். ஆனால், யாருக்குக் கோபம் வருகிறது. 'பாதம் தாங்கி' பழனிச்சாமிக்குக் கோபம் வருகிறது. ஏனென்றால், அவர்களுக்குள் வேறு ஒன்றும் இல்லை, கள்ளக்காதல். பத்து வருடம் ஒன்றாகக் கூட்டணியில் இருந்து கொண்டு, தமிழ்நாட்டிற்குத் தேவையான எந்தத் திட்டத்தையும் கொண்டு வராமல், அனைத்து மாநில உரிமைகளையும் விட்டுக் கொடுத்துவிட்டு நீட் தேர்வைக் கொண்டு வந்து, மொழி உரிமையை விட்டுக் கொடுத்து, கல்வி உரிமையை விட்டுக் கொடுத்து, நிதி உரிமையை விட்டுக் கொடுத்துவிட்டு, இப்போது சி.ஏ.ஏ சட்டத்தைக் கொண்டு வந்து அனைத்து உரிமைகளையும் விட்டுக் கொடுத்துவிட்டார்கள்.

### முதுகெலும்பு இல்லாத ஒரே மனிதர்!

இன்று 'பாதம் தாங்கி' பழனிச்சாமி சொல்கிறார். `ஆமாம் நான் தவழ்ந்து தான் போனேன்' என்கிறார். அவர் யாரைப் பார்த்தாலும் முட்டிபோட்டுவிடுகிறார். மோடியைப் பார்த்தால் படுத்துவிடுகிறார். அமித்ஷாவைப் பார்த்தால் படுத்துவிடுகிறார். அதாவது மனிதனுக்கு முதுகெலும்பு இருக்கிறதா இல்லையா? அது எதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நிமிர்ந்து நிற்க. ஆனால், உலகிலேயே முதுகெலும்பு இல்லாத ஒரே மனிதர் யார் என்றால் திரு 'பாதம் தாங்கி' பழனிச்சாமி அவர்கள்தான்.

நான் இந்த நேரத்தில் அவரிடம் சில கேள்விகளை மட்டும் அவரிடம் உங்கள் முன் நான் கேட்கிறேன்.

முதல் கேள்வி, திரு 'பாதம் தாங்கி' பழனிச்சாமி அவர்களே, நீங்கள் உரிமைகளை மீட்போம் என்று இப்போது சொல்கிறீர்கள். தமிழ்நாட்டைக் காப்போம் என்று இப்போது சொல்கிறீர்கள். நடப்பது சட்டமன்றத் தேர்தலா? நாடாளுமன்றத் தேர்தலா? அப்போது நீங்கள் யாரிடமிருந்து உரிமைகளைக் காப்பாற்றப் போகிறீர்கள்?

நாம் இதுவரைக்கும் '29 பைசா' என்று சொல்லி அவர்களைக் கேள்வி கேட்கிறோம். அமித்ஷா அவர்களைக் கேள்வி கேட்கிறோம். இதுவரைக்கும் ஒரே ஒரு கேள்வி `திரு 29 பைசா'வைப் பார்த்து நீங்கள் கேள்வி கேட்டீர்களா? எங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யுங்கள் என்று சொன்னீர்களா? மக்கள் இவ்வளவு பாதிக்கப்பட்டார்களே, அதற்காக நாம் 37 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பீடு கேட்டோமே, ஆனால், ஒன்றிய அரசு இதுவரைக்கும் ஒரு ரூபாய் கூட கொடுக்கவில்லையே..! ஆனால், நம் தலைவர் அவர்கள் பாதிக்கப்பட்ட அத்தனைக் குடும்பங்களுக்கும் 6 ஆயிரம் ரூபாய் இழப்பீடு கொடுத்திருக்கிறார்.

### தைரியம் உங்களுக்கு இருக்கிறதா?

இரண்டாவது கேள்வி, நாங்கள் மோடி மீண்டும் பிரதமர் ஆகக்கூடாது என்று சொல்கிறோம். மோடி வரவே கூடாது என்று சொல்கிறோம். உங்களால் சொல்ல முடியுமா? உங்களுக்கு அந்த தைரியம் இருக்கிறதா? உங்களுக்கு அந்த துப்பு இருக்கிறதா? திராணி இருக்கிறதா? பாதம் தாங்கி பழனிச்சாமி அவர்களே மோடி வரக்கூடாது என்று சொல்கின்ற தைரியம் உங்களுக்கு இருக்கிறதா?

அ.தி.மு.க-வின் முன்னாள் அமைச்சர்கள் வீட்டில் நம் அரசு டி.வி.எ.சி சோதனை செய்தார்கள். அப்போது தி.மு.கவைக் கண்டித்து, அறிக்கைகள் எல்லாம் விட்டீர்கள். ஆனால், இப்போது நான்கு நாட்களுக்கு முன்பு உங்களின் முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் வீட்டில் ஈ.டி ரெய்டு நடந்தது. வாயைத் திறந்தீர்களா? குறைந்தபட்சம் ஒரு வேண்டுகோளாவது வைத்தீர்களா? எதுவுமே கிடையாது.

இதையெல்லாம் தட்டிக் கேட்க வேண்டும் என்றால், வருகின்ற ஏப்ரல் 19-ஆம் தேதி வாக்குச் சாவடிக்குச் சென்று நீங்கள் கை சின்னத்தில் சகோதரர் சசிகாந்த் செந்தில் அவர்களுக்கு வாக்களித்து, கிட்டத்தட்ட 5 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் அவரை நீங்கள் வெற்றி பெற வைக்க வேண்டும்.

இந்த திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் வேட்பாளர் அறிமுகக் கூட்டம் இதுவரைக்கும் நடக்கவில்லை. எனவே, இந்தப் பிரச்சாரக் கூட்டத்தையே வேட்பாளர் அறிமுகக் கூட்டமாகக் கருதி நீங்கள் அனைவரும் நம் சகோதரர் சசிகாந்த் செந்தில் அவர்களின் வெற்றிக்காகப் பாடுபட வேண்டும்.

உங்களிடம் நான் ஒன்றே ஒன்றை மட்டும் கேட்டுக்கொள்கிறேன். வரும் ஜூன் 3 ஆம் தேதி முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 101-வது பிறந்தநாள். வாக்கு எண்ணிக்கை ஜூன் 04-ஆம் தேதி.

நான் இதுவரைக்கும் 11 நாடாளுமன்றத் தொகுதிகளில் பிரச்சாரம் செய்து முடித்துவிட்டேன். நான் அடித்துச் சொல்கிறேன், நிச்சயமாகச் சொல்கிறேன், சவால் விடுகிறேன். இந்த 11 தொகுதிகளிலும் வெற்றி பெறப்போவது நமது கூட்டணிதான். ஆனால், நான் உங்களிடம் கேட்பது கலைஞரின் பிறந்த நாள் பரிசாக 40-க்கு 40 தொகுதிகள் வெற்றி பெற்று நம் தலைவர் கலைஞரின் காலடியில் அதைச் சமர்ப்பிக்க வேண்டும்.

### உங்கள் வீட்டுப் பிள்ளை!

உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால் தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன், இன்னும் பெருமையாக, பூரிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன், கை சின்னத்தில் வாக்களித்து நம் சகோதரர் அவர்களை 6 இலட்சம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு உங்கள் வரவேற்புக்கும் வாய்ப்புக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

சட்டமன்ற உறுப்பினரும், மாவட்டக் கழகச் செயலாளருமான டி.ஜே.கோவிந்தராஜன், சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் சுதர்சனம், மாநிலங்களவை உறுப்பினர் திருவள்ளூர் நாடாளுமன்றத் தொகுதி பார்வையாளர் கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர் காங்கிரஸ் பேரியக்கத்தின் மாவட்டத் தலைவர் துரை.சந்திரசேகர், முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளர் இ.ஏ.பி. சிவாஜி, மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர்கள் அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன்,

பொன்னேரி தொகுதியின் பொறுப்பாளர் அழகிரி சதாசிவம், தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில துணைச் செயலாளரும் சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான சி.எச். சேகர், மாநில வர்த்தகர் அணியின் துணை செயலாளர் கே.ஜி.பாஸ்கர், கொள்கைப் பரப்புச் செயலாளர் அன்புவாணன், அயலக அணியின் துணைச் செயலாளர் ஸ்டாலின், மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணியின் துணைச் செயலாளர் ஏ.ஆர்.டி.உதயசூரியன் சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மதன்குமார் உள்பட கழக நிர்வாகிகள், 'இந்தியா' கூட்டணிக் கட்சியினர் பலரும் கலந்து கொண்டனர்.



சேலம் மற்றும் கள்ளக்குறிச்சி மக்களவை தொகுதி கழக வேட்பாளர்களுக்கு பரப்புரை மேற்கொள்ளவுள்ள கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை தமிழ்நாடு முழுவதும் பரப்புரை மேற்கொண்டுவரும் மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல் ஹாசன் அவர்கள் நேற்று (30.03.2024) சேலத்தில் சந்தித்து பேசினார்.

### காலை உணவுத் திட்டம் தரும் அரசு வேண்டுமா?

# விவசாயிகள் மீது போர் தொடுக்கும் அரசு வேண்டுமா?

## ஈரோடு பிரச்சாரத்தில் கமல்ஹாசன் கேள்வி!

ஈரோடு, மார்ச் 31-

“காலை உணவுத் திட்டம் தரும் அரசு வேண்டுமா? விவசாயிகள் மீது போர் தொடுக்கும் அரசு வேண்டுமா?” என்று மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமலஹாசன் ஈரோட்டில் கழக வேட்பாளரை ஆதரித்து நடை பிரச்சாரத்தில் கேள்வி எழுப்பினார்.

மக்களவைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு முழு ஆதரவைத் தெரிவித்துள்ள மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன், தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு ஆதரவாகப் பிரச்சாரம் மேற்கொள்வதாக அறிவித்திருந்தார்.

அதன்படி, ஈரோடு மக்களவைத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் கே.இ. பிரகாஷுக்கு உதய சூரியன் சின்னத்தில் வாக்குக் கேட்டு ஈரோடு வீரப்பன்சத்திரம் பகுதியில் பொதுமக்களிடையே அவர் பேசியதாவது:-

இங்கே நான் பிரச்சாரம் செய்ய வருவதற்குக் காரணம், நாடாளுமன்றத்தில் உங்கள் குரல் ஒலிக்க வேண்டும் என்பது தான். தேர்தலில் போட்டியிடாமல் தியாகம் செய்து விட்டீர்களே என்று கேட்கிறார்கள். நான் செய்தது தியாகம் அல்ல. தமிழ்நாட்டைப் பாதுகாக்க மேற்கொண்டுள்ள வியூகம்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு பல தலைவர்கள் அடித்தளம் போட்டிருக்கிறார்கள். மக்களின் உழைப்பால் தமிழகம் வளர்ந்திருக்கிறது. மதிய உணவுத் திட்டத்தை காமராஜர் தொடங்கினார். எம்.ஜி.ஆர். அதை தொடர்ந்தார். அதன் நீட்சியாக இன்று காலை உணவுத் திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் அறிமுகப்படுத்தி உள்ளார். இதுபோன்றதிட்டங்களுக்கு எல்லாம் மத்தியில் இருந்து உரிமை கொண்டாட முடியாது. இங்கே ஒரு மய்யம் இருக்கிறது. மத்தியில் இருப்பவர்கள் எதையும் சும்மா கொடுத்து விடவில்ல. தமிழ்நாட்டு மக்களின் உழைப்பே, மாநிலத்தின் வளர்ச்சிக்கு காரணம்.

வெளி மாநிலங்களில் இருந்து, குறிப்பாக வட மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டுக்கு ஏராளமானோர் வேலைக்கு வருகிறார்கள் என்று இங்கு ஒரு விமர்சனம் இருக்கிறது. இதன் அர்த்தம் என்ன? அங்கு வேலை இல்லை. ஏன் அங்கு வேலை இல்லை என்று கேட்க வேண்டும்.

**வந்தாரை வாழவைக்கும் தமிழ்நாடு!**

தமிழ்நாட்டு மக்கள் செலுத்தும் வரியில், ஒரு ரூபாயில் 29 பைசாவைத் தான் திருப்பிக் கொடுக்கிறார்கள். ஆனால், அவர்கள் ஆட்சிபுரியும் மாநிலங்களுக்கு ஒரு ரூபாய்க்கு, ஏழு ரூபாய் கொடுக்கிறார்கள். அப்படி இருந்தும் அங்கிருந்து, தமிழ்நாட்டுக்கு கூலி வேலைக்கு ஆட்கள் வருகிறார்கள். வந்தாரை வாழ வைக்கும் தமிழ்நாடு, இப்படி வரும் எல்லோருக்கும் வேலை கொடுக்கிறது. இந்தப் புகழை ஏற்றுக் கொள்வோம்.

வழக்கமாக தமிழ்நாட்டில் நடைபெறும் கூட்டங்களில் பங்கேற்கும் இந்தியப் பிரதமர் மோடி, மழலைத் தமிழில் ஓரிரு வார்த்தைகளை உதிர்ப்பார். அவ்வையாரைச் சுட்டிக் காட்டுவார். ஆனால், அவ்வையார் வேறு மொழியில்பேசியிருப்பாரோ என்று சந்தேகம் எழும் அளவுக்கு, அவரது பேச்சு இருக்கும்.

**பத்திரிகையாளரையே சந்திக்காத ஒரு பிரதமர்!**

எப்படியாவது இந்த நாட்டைப் பிடிக்க வேண்டும் என்பது வெறி. ஆனால், நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்பது வீரம். பத்திரிகையாளரையே சந்திக்கப் பயப்படும் ஒருவரிடம் வீரத்தைப் பற்றிப் பேசி என்ன பயன்? யாருக்கும் பயப்படாமல், இப்படி பளிச்சென உண்மையைப் போட்டு உடைக்கிறேன் என்று கேட்கலாம். இதைக் கற்றுத் தந்தது இந்த ஊர்க்காரர் தான். .பெரியார்

சுதந்திரத்துக்கு முன்பு நம் ஊருக்கு வந்த வெள்ளையனை விரட்டி விட்டோம். ஆனால், இப்போது மேற்கு இந்தியாவில் இருந்து ஒரு கம்பெனி இங்கு வந்திருக்கிறது. குறிப்பாக, காந்தியார் பிறந்த ஊரில் இருந்து இங்கு வந்திருக்கிறது. அதுதான் மேற்கு இந்திய கம்பெனி. எங்களிடம் இருந்து எடுத்துக் கொண்டு போய்விட்டு, ஒரு ரூபாயில் எங்களுக்கு 29 பைசாதான் கொடுக்கிறார்கள். ஆனால், உங்கள் ஊர்க்காரர்களுக்கும் கொடுக்கிறீர்களா என்று தெரியவில்லை. ஏனெனில், உங்கள் ஊர்க்காரர்கள் இங்கே கூலி வேலைக்கு வருகிறார்கள். அப்படியானால், எங்களிடம் இருந்து எடுத்துக் கொண்டு செல்வது, எங்கே தான் போகிறது?

**விவசாயிகள் மீது தாக்குதல்!**

டெல்லியில் போராட்டம் நடத்தும் விவசாயிகள் மீது, ட்ரோன் மூலமாக கண்ணீர் புகை குண்டு (டியர் காஸ்) வீசுகிறார்கள். விஞ்ஞானத்தை விவசாயத்துக்குப் பயன்படுத்தாமல், போராட்டம் நடத்தும் விவசாயிகளை ஒடுக்கப் பயன்படுத்துகிறார்கள்.

தமிழகத்தில் மீண்டும் இந்தியைத் திணிக்கிறார்கள். நாங்கள் ஏற்கெனவே இந்தி திணிப்பை எதிர்த்துப் போராடியவர்கள். இந்தி தேவைப்பட்டால், நாங்களே கற்றுக் கொள்வோம். எங்கள் மீது திணிக்காதீர்கள். அப்படி திணித்தால் நடப்பதே வேறு. எங்களுக்கு தனித்துவமான மொழி இருக்கிறது. 1950ம் ஆண்டில் 22 மொழிகளுக்கும் இடம் உண்டு என்று கொடுத்த சத்தியம் என்னவானது?

நாங்கள் மதிய உணவும், காலை உணவும் கொடுத்து குழந்தைகளைப் படிக்க வைத்தபோது, எங்கே முன்னேறி விடுவார்களோ என்று பயந்து, எழுத முடியாத தேர்வை எல்லாம் எங்கள் மீது திணிக்கிறீர்கள்.

**இடஒதுக்கீட்டை அழிக்க நினைக்கும் பா.ஜ.க.!**

உலகம் முழுவதும் பெட்ரோல் விலை குறையும் போது, இந்திய மக்களுக்கு மட்டும் லாபத்துக்கு விற்றது மத்திய அரசு. அதை நீங்கள் மறந்து விடாதீர்கள். பல ஆண்டுகள் போராடிப் பெற்ற இடஒதுக்கீட்டை அழிக்க நினைக்கிறார்கள். ஈரோட்டில் இருந்து இதை எதிர்க்கிறேன். நாங்கள் போராடிப் பெற்றதை இல்லாமல் செய்ய முற்பட்டால், அதற்கான பதில் தேர்தலில் கிடைக்கும்.

தமிழர்கள் படித்து நீதிபதிகளாகவும், டாக்டர்களாகவும் உருவாகிறார்கள். ஆனால், நீதிபதி தேர்விலும் ஓரவஞ்சனை காட்டுகிறார்கள். வெள்ளம் போன்ற ஆபத்துக் காலங்களில் கூட உதவ மறுக்கிறது ஒன்றிய அரசு. ஒன்றியம் என்று சொன்னால அவர்களுக்கு கோபம் வருகிறது.

தமிழகத்துக்குக் கொடுக்க வேண்டிய பாக்கியைக் கேட்டாலும், கொடுத்ததே பிச்சை தானே என்று சொல்கிறது ஒன்றிய அரசு. அதுமட்டுமா, தொடர்ச்சியாக பொய்களையே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதை உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

**சி.ஏ.ஏ. ஓரவஞ்சனை திட்டம்!**

இங்கு வரும் போதெல்லாம் ஒருவர் தமிழ்நாட்டை நேசிக்கிறேன் என்கிறார். ஆனால், பொது சிவில் சட்டத்தை (சிஏஏ) கொண்டு வந்த போது, எல்லோருக்கும் இடம் கொடுக்கவில்லையே. குறிப்பிட்ட மதத்த வரைக் குறிப்பிடவே இல்லை. அதுமட்டுமா, தமிழர்களைப் பிடிக்கும் என்று கூறுபவர்கள், ஈழத்தில் போரால் ஏற்பட்ட பாதிப்புகளை எதிர்கொண்ட தமிழர்களுக்குக் கூட சிஏஏவில் இடம் கொடுக்கவில்லையே? சிஏஏ என்பதே ஓரவஞ்சனைத் திட்டம்தான்.

மத்தியில் ஆள்வோரின் வெறி முழுக்க நாற்காலி மீது தான் இருக்கிறது. அனைத்து இடங்களிலும் நாற்காலி போட்டு உட்கார வேண்டுமென கருதுகிறார்கள். ஆனால், இங்கு அது பலிக்காது. இது கேள்வி கேட்கும் மக்கள் உள்ள மாநிலம். உங்களுக்கு இங்கு நிரந்தர நாற்காலி கிடைக்காது. தமிழ்நாட்டு மக்களின் குரல் பாராளுமன்றத்தில் கேட்க வேண்டும். அதற்கு இந்த தேர்தல் நல்ல வாய்ப்பு.

தமிழ்நாட்டில் மாணவர்களுக்கு மதிய உணவு மட்டுமல்ல, காலை உணவும் வழங்கப்படுகிறது. இல்லத்தரசிகளுக்கு உரிமைத் தொகை கொடுக்கிறார்கள். இதை முதலில் வலியுறுத்தியது நான் என்றாலும், செயல்படுத்தியது எனது சகோதரர்கள். பாஜக அரசுகள் இதை செயல்படுத்தி இருந்தால், நாங்கள் மதித்து இருப்போம். ஆனால் செய்யவில்லை. வட மாநிலங்களில் ஏன் இதுபோன்ற திட்டங்களைச் செயல்படுத்தவில்லை?

தமிழ்நாட்டுக்கு ஒரு ரூபாயைப் பெற்றுக் கொண்டு, 29 பைசா தருகிறீர்கள். அதை வைத்துக் கொண்டே இத்தனை திட்டங்களைச் செயல்படுத்துகிறோம். ஆனால், 7 ரூபாய் கிடைக்கும் மாநிலங்கள் இவற்றை ஏன் செயல்படுத்தவில்லை. எனவே, 29 பைசாதான் தருவோம் என கிண்டல் அடிக்காதீர்கள். அதேபோல, 29 பைசாவை 20 பைசாவாக்கலாமா என்று யோசிக்காதீர்கள்.

நம் பிள்ளைகள் கல்வி கற்க காலை உணவுத் திட்டம் செயல்படுத்தும் அரசு வேண்டுமா? அல்லது நுழைவுத் தேர்வுகள் என்ற பெயரில் கஷ்டம் கொடுக்கும் அரசு வேண்டுமா? மகளிர் உதவித்தொகை தரும் அரசு வேண்டுமா? அல்லது பில்கிஸ் பானு குற்றவாளியை நடமாடவிட்டு, அவர்களை மாலை போட்டு வரவேற்கும் அரசு வேண்டுமா? விவசாயம் காக்கும் அரசு வேண்டுமா? அல்லது விவசாயிகள் மீது போர் தொடுக்கும் அரசு வேண்டுமா? தொழில்களை ஊக்குவிக்கும் அரசு வேண்டுமா? அல்லது ஜி.எஸ்.டி. போட்டு சிறு, குறு வியாபாரிகளை நெரிக்கும் அரசு வேண்டுமா? அனைத்து ஜாதியினரையும் அர்ச்சகராக்கும் அரசு வேண்டுமா? ஜனாதிபதியே ஆனாலும், வெளியே நிறுத்தும் கோயில்களை நடத்தும் அரசு வேண்டுமா?

**தி.மு.க. அரசு ஏழைகளுக்கான அரசு!**

திமுக அரசு ஏழைகளுக்கான அரசு. அது இன்னும் சிறப்பாக இருக்க வேண்டுமென நான் முன்பு விமர்சனம் செய்தேன். ஆனால், அதைவிட மோசமானவர்களிடமிருந்து நாட்டைக் காக்க, திமுகவை ஆதரிக்க வேண்டும். ஆளுநரை அனுப்பி அரசை மிரட்டுகிறார்கள். 29 பைசா மட்டுமே தந்து, அடிவயிற்றில் கை வைக்கிறார்கள். இப்படி நம் மீது கை வைப்பவர்களுக்கு, எதிராக மை வைப்போம். அதை இந்த ஊரில் இருந்து தொடங்குவோம்.

எனக்கு நாற்காலி கேட்டு இங்கு வரவில்லை. எனக்கு மக்கள் மனதில் நாற்காலி உண்டு. சிறு பிள்ளை முதல் 66 வருடங்களாக அதில் அமர்ந்திருக்கிறேன். எனக்கு குஷன் நாற்காலி கேட்கவில்லை. இப்போது இருப்பதே மகிழ்ச்சி. ஆனால், எனக்கு இத்தனை செய்த மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்பதற்காகத் தான் மக்கள் நீதி மய்யம் கட்சி தொடங்கினேன். இந்தக் கட்சியின் குரல் நியாயத்துக்காக தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருக்கும். எந்தக் கட்சி மக்களுக்கு நன்மை செய்தாலும், அதைப் பாராட்டுவதில் தயக்கம் இல்லை. நான் சொன்னதை செய்தீர்களே என்று மார் தட்டவில்லை. செய்ததை பாராட்டுவோம், இன்னும் செய்ய வேண்டுமென கேட்போம்.

**அமைச்சர் முத்துசாமியின் சாதனைகள்!**

தமிழக வீட்டு வசதித் துறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோட்டுக்கு செய்திருக்கும் சாதனைகளை நான் பட்டியலிடத் தேவையில்லை. இவர்கள் நிறைய செய்துவிட்டு, வாக்கு கேட்கிறார்கள். ஆனால், இனி செய்வோம் என்று சிலர் கூறுகிறார்கள். இதுவரை ஏன் செய்யவில்லை என்ற கேள்விக்கு அவர்களிடம் பதில் இல்லை. ஈரோடு மக்களவைத் தொகுதி வேட்பாளர் கே.இ.பிரகாஷ் படித்தவர், பண்பாளர், ஈரோட்டை அறிந்தவர், பிறப்பால் அனைவரும் சமம் என்பதை உணர்ந்தவர். எனவே, உதய சூரியன் சின்னத்துக்கு வாக்களியுங்கள். அவரை மிகப் பெரிய வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யுங்கள். அவர் நமக்காகத்தான் வாக்கு கேட்கிறார். நாளை நமதே.

இவ்வாறு கமல்ஹாசன் பேசினார்.

தொடர்ந்து, கருங்கல்பாளையம், வெப்படை பகுதிகளிலும் மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன், பொதுமக்கள் மத்தியில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.உடன் கழக துணை பொது செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி. சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், தாயகம் கவி உள்ளிட்ட ‘இந்தியா’ கூட்டணி மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதியில் கழக வேட்பாளர் ஈஸ்வரசாமியை ஆதரித்து வாக்குச் சேகரித்தார்.

### சமையல் எரிவாயுவுக்கு மானியம் வழங்காமல்

# மக்கள் பணத்தைக் கொள்ளையடிக்கும் மோடிக்கு வாக்களிக்காதீர்!

## பொள்ளாச்சி தொகுதியில் கனிமொழி கருணாநிதி பிரச்சாரம்!

பொள்ளாச்சி, மார்ச் 31 -

தமிழ்நாட்டில் ஏப்ரல் 19ம் தேதி நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் ஈஸ்வரசாமியை ஆதரித்து, கோவை மாவட்டம் நெகமம் பகுதியில், சின்ன நெகமம் திடலில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, ஆயிரக்கணக்கான மக்களை மத்தியில், தேர்தல் பரப்புரை மேற்கொண்டு, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளைச் சேகரித்தார்.

இதில் கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன், மற்றும் மாவட்ட நிர்வாகிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள், உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

பிரச்சாரத்தில் கனிமொழி கருணாநிதி பேசியதாவது :-

தமிழ்நாட்டு மக்களுக்கு யார் ஆட்சிக்கு வர வேண்டும் யார் வரக்கூடாது என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் தெளிவாக உள்ளனர். பா.ஜ.க. என்ன செய்தாலும், தமிழ்நாட்டில் அவர்களால் வெற்றி பெற முடியாது, நாடும் நமதே, நாற்பதும் நமதே.

கோவை நாடாளுமன்றத் தொகுதியில் வேட்பாளர் அண்ணாமலை 60 சதவீத வாக்குகள் பெறுவார் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார், அவர் காணும் கனவில் இதுவும் ஒன்று. தமிழ்நாட்டில் பா.ஜ.க.விற்கு வெற்றி இல்லை, என்றுமே தமிழ்நாடு பக்கம் திரும்பிக்கூடப் பார்க்காத பிரதமர், தேர்தல் என்றவுடன் அடிக்கடி வந்துள்ளார். தேர்தல் பத்திரம் பா.ஜ.க.விற்காக வாங்கினால் உடனடியாக அவர்கள் மீதான வழக்குகள் அனைத்தும் அகற்றப்படும்.

நம் வீட்டுப் பிள்ளைகள் படிக்கக்கூடாது என்பதற்காக நுழைவுத் தேர்வு கொண்டு வந்தது ஒன்றிய அரசு. ஒன்றியத்தில் நாம் ஆட்சி அமையும் பொழுது, மக்களுக்கான பல்வேறு திட்டங்கள் கொண்டுவரப்படும், கல்விக் கடன் ரத்து, விவசாயக் கடன் ரத்து செய்யப்படும்.

**ஊழல் பா.ஜ.க.!**

இரண்டு தொலைப்பேசி எண்களை வைத்து, ஆயுஷ்மான் பாரத் என்னும் திட்டத்தில் போலிக் கணக்குகள் உருவாக்கி ஊழல் செய்துள்ளது பாஜக, மேலும் மக்களின் அத்தியாவசிய தேவையான சுகாதாரத் துறையில் காப்பீடு திட்டத்தின் மூலம் ஊழல் செய்துள்ளதை ஒன்றிய அரசின் சிஏஜி அறிக்கை வெளியிட்டுள்ளது.

சமையல் எரிவாயுவுக்கு மானியம் வழங்குவதாகக் கூறும் பிரதமர் இதுவரை மானியம் வழங்கியுள்ளாரா? அவர் ஆட்சிப் பொறுப்பு ஏற்கும் பொழுது ரூ.410 ஆக இருந்த சமையல் எரிவாயுவின் விலை தற்போது ஆயிரத்திற்கும் மேலே சென்று விட்டது. நமது வேட்பாளரை உதய சூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்யுங்கள்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி பேசினார்.

### கடலூர் நாடாளுமன்ற காங்கிரஸ் வேட்பாளர் டாக்டர் எம்.கே.விஷ்ணுபிரசாத்தை ஆதரித்து

# குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!

கடலூர், மார்ச் 31 -

கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



கடலூர் நாடாளுமன்ற தொகுதி காங்கிரஸ் கட்சி வேட்பாளர் டாக்டர் எம்.கே.விஷ்ணுபிரசாத்தை ஆதரித்து கடலூர் மாவட்டம் கடலூர் நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதி செயல்வீரர்கள் கூட்டம் இன்று (31.03.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 04.00 மணியளவில் குறிஞ்சிப்பாடி வடலூர் சாலை, ரோட்டு ஆண் டிக்குப்பம் பைபாஸ் சாலை அருகில், முத்தமிழறிஞர் கலைஞர் திடலில் நடைபெறவுள்ளது.

அதுசமயம், இக்கூட்டத்தில் திமுக தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகளின் குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தி.மு.க., இந்திய தேசிய காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், திராவிடர் கழகம், ம.தி.மு.க., இந்திய யூனியன் முஸ்லீம் லீக், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, தமிழக வாழ்வுரிமை கட்சி, மக்கள் நீதி மய்யம், மனித நேய மக்கள் கட்சி, மூவேந்தர் முன்னேற்றக் கழகம், தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி, எம்.ஜி.ஆர்.கழகம்,

கொங்குநாடு மக்கள் கட்சி, மனித நேய ஜனநாயக கட்சி, இந்திய தேசிய லீக், இந்திய சமூக நீதி இயக்கம், தமிழ் மாநில தேசிய லீக், திராவிட இயக்க தமிழர் பேரவை, சமத்துவ மக்கள் கழகம், ஆதி தமிழர் பேரவை, அகில இந்திய வல்லரசு பார்வார்டு பிளாக், கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கம், மாவீரன் மஞ்சள் படை, முக்குலத்தோர் புலிப்படை, மக்கள் விடுதலைக் கட்சி, ஆம்ஆத்மி கட்சி, யாதவ மக்கள் இயக்கம், தேவேந்திரகுல மக்கள் முன்னேற்றப் பேரவை, ஆதி தமிழர் கட்சி மற்றும் குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திமுக தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் ஒன்றிய பெருந்தலைவர்கள், நகரமன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக் குழு உறுப்பினர்கள், மற்றும் நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அனைத்து அணியின் நிர்வாகிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.



ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி தலைமையில் மக்கள் நீதி மையம் கட்சியின் நிறுவனத் தலைவர் கமல்ஹாசன் ஈரோடு நாடாளுமன்றத் தொகுதி ‘இந்தியா’ கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் கே.இ.பிரகாஷை ஆதரித்து தேர்தல் பரப்புரை மேற்கொண்டார். பரப்புரையில் கழக துணை பொதுச் செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு உள்ளிட்ட கழக நிர்வாகிகள், ‘இந்தியா’ கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## சேலம் மாநகரில் காய்கறிச் சந்தை, சாலைகளில் கழகத் தலைவர் -

# மக்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் வாக்குச் சேகரித்த காட்சி!

## “எங்கள் முதல்வருக்கே வாக்கு” என மக்கள் உள்ளம் மகிழ்ந்து உறுதி!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.03.2024) சேலம் மக்களவை தொகுதி கழக வேட்பாளர் டி.எம்.செல்வகணபதி அவர்களுக்கு ஆதரவாக அக்ரஹாரம் பிரதான மார்க்கெட் பகுதியில் வியாபாரிகள் மற்றும் பொதுமக்களிடம் வாக்குச் சேகரித்தார். உடன் கழக மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான இரா.ராஜேந்திரன், மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த்திபன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.03.2024) சேலம் மக்களவை தொகுதி கழக வேட்பாளர் செல்வகணபதி அவர்களுக்கு ஆதரவாக அக்ரஹாரம் பிரதான மார்க்கெட் பகுதியில் வியாபாரிகள் மற்றும் பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார். உடன் கழக மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான இரா. ராஜேந்திரன், மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த்திபன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.03.2024) சேலம் மக்களவை தொகுதி கழக வேட்பாளர் செல்வகணபதி அவர்களுக்கு ஆதரவாக அக்ரஹாரம் பிரதான மார்க்கெட் பகுதியில் வாக்குச் சேகரிக்கச் சென்றபோது அங்கிருந்த தேநீர் கடையில் தேநீர் அருந்தினார். உடன் கழக மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான இரா.ராஜேந்திரன், மாவட்டச் செயலாளர் எஸ் ஆர்.சிவலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த்திபன் ஆகியோர் உள்ளனர்.

**சேலம், மார்ச் 31 -**

**தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று காலை 7 மணி அளவிலேயே சேலம் தொகுதி வேட்பாளர் செல்வகணபதிக்காக சேலம் மாநகரில் முக்கிய பகுதிகளான அக்ரஹாரம் காய்கறிச் சந்தையில் நடந்துச் சென்றே வியாபாரிகள், வர்த்தக பெருமக்கள் மற்றும் பொதுமக்களிடம் வாக்குச் சேகரித்தார்.**

கழக வேட்பாளர் செல்வகணபதியுடன் வந்த தளபதி அவர்களை பொதுமக்களும் வர்த்தகர்களும், வியாபாரிகளும், கடைகாரர்களும் முகம் மலர்ந்து பரவசத்துடன் வரவேற்ற காட்சி அனைவரையும் பரவசப்படுத்தியது. குறிப்பாக பெண்கள், பெருமளவில் முன்வந்து தளபதியிடம் உரிமையோடு பேசி மகிழ்ந்து செல்ஃபி எடுத்து மகிழ்ந்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சேலம் தொகுதி வேட்பாளர் செல்வகணபதி, மாவட்டச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான இராசேந்திரன் ஆகியோருடன் அருகிலிருந்த கடையில் தேநீர் அருந்திட சென்றபோது கடை ஊழியர்கள் மகிழ்ச்சியோடு வரவேற்று வழங்கிய தேநீரை அருந்தி மகிழ்ந்தார். இந்தக் காட்சியினைக் கண்ட பொதுமக்கள், ஒரு முதலமைச்சர் ஒரு மாபெரும் கட்சியின் மகத்தான தலைவர் இவ்வளவு எளிமையாக இருக்கிறாரே! என்று கூறி வியந்து மகிழ்ந்தனர். தேநீர் கடையில் திரளாகக் கூடிய கூட்டம் அலைமோதி ஆரவாரம் செய்தது.

அப்போது பொதுமக்கள், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி வரும் மக்கள் நலத்திட்டங்களான, கட்டணமில்லா பேருந்து பயணம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், இன்னுயிர் காப்போம் திட்டம் என்ற பல்வேறு மக்கள் நலத்திட்டங்களால் எங்களுடைய ஒவ்வொரு குடும்பமும், அதிலுள்ள அனைத்து குடும்ப உறுப்பினர்களும் ஒவ்வொரு விதத்தில் பயனடைந்து வருகிறோம் என்றும். வருகின்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் எங்களுடைய வாக்குகளை உதயசூரியனுக்கு அளித்து, திராவிட முன்னேற்றக் கழகம் சேலத்தில் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்வோம் என்று மகிழ்ச்சி பொங்கிட உறுதி அளித்தனர்.

மேலும் அக்ரஹாரம் காய்கறிச் சந்தையில் பொதுமக்களைக் காணச் சென்ற முதலமைச்சர் அவர்களை திரளாகச் சேர்ந்து வரவேற்றனர். இது கழகத் தலைவர் மீது மக்கள் எந்த அளவிற்கு பற்றும் பாசமும் நேசமும் கொண்டுள்ளனர் என்பதை காட்டுவதாக அமைந்தது. கடைக்காரர்களிடம் நன்றி சொல்லிவிட்டு மீண்டும் மக்களுடனே தளபதி அவர்கள் நடந்து சென்றார். செல்லும் வழி எங்கும் திரண்ட மக்கள் கூட்டம் கழகத் தலைவரை வரவேற்றும், கைகுலுக்கியும், செல்பி எடுத்தும் மகிழ்ந்தனர். காய்கறி கடைகளில் இருந்தவர்கள் எல்லோரும் எழுந்து இரு கரங்களையும் கூப்பியபடி வணங்கி வரவேற்று எங்கள் வாக்குகள் உதயசூரியனுக்கே என்று தலைவரிடம் மகிழ்ச்சியுடன் கூறினர்.

பலரும் கூடி செல்பி எடுத்த போதும் அமைதியாக அவர்களுடன் பேசி மகிழ்ந்த தலைவர் அவர்களைப் பார்த்த பொதுமக்கள் இப்படி ஒரு தலைவரை நாங்கள் இதுவரை கண்டதில்லை என உள்ளம் பூரித்தனர். தளபதி அவர்களின் இந்தப் பாசத்திற்கும், எளிமைக்கும் மக்கள் 40 தொகுதிகளிலும் வெற்றியை வழங்குவார்கள். இதன்மூலம் மத்தியில் இந்தியா கூட்டணி அரசு அமைக்க ஒத்துழைப்பு தருவார்கள் என்பது உறுதியானது என்றும் கூறினார்கள்.

காலையிலேயே கூலி வேலைக்குச் செல்லும் பெண் தொழிலாளர்கள், முதலமைச்சரிடம் உங்களின் காலை உணவுத் திட்டத்தால் குழந்தைகள் எந்தவித சிரமமுமின்றி பள்ளிக்குச் செல்கிறார்கள். நாங்கள் கவலையின்றிக் காலையிலேயே வேலைக்குச் செல்ல முடிகிறது என்று மகிழ்ச்சியோடு தெரிவித்தனர். முதலமைச்சர் அவர்கள் கழக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைப் பொதுமக்களிடம் எடுத்துக் கூறி ஒரு மணி நேரத்திற்கும் மேலாக நடந்தவாறே வாக்கு சேகரித்தார்.

சேலத்தில் ஏற்கனவே, 11 உழவர் சந்தைகள் இருந்தன. முதலமைச்சர் அவர்கள் அண்மையில் மேலும், 2 உழவர் சந்தைகளை திறந்து வைத்தார்கள். இதற்கு காய்கறி வியாபாரிகள், முதல்வருக்கு நன்றி தெரிவித்தார்கள். சேலம் நாடாளுமன்றத் தொகுதியில் டி.எம்.செல்வகணபதியை வேட்பாளராக அறிவித்தது முதல் அவருக்கு மக்களிடம் ஆதரவு தொடர்ந்து அதிகரித்த வண்ணம் உள்ளது. முதலமைச்சர் அவர்கள் சேலம் வருகையினால் அவரது வெற்றி மேலும் உறுதியாகிவிட்டது.

இந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கான திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையில் தமிழ்நாட்டிற்கு பல நல்ல திட்டங்கள் உள்ளன. இவை அனைத்தையும் நிறைவேற்றித் தர வேண்டுமென முதலமைச்சர் அவர்களிடம் பொதுமக்கள் கேட்டுக் கொண்டார்கள். மத்தியில் இந்தியா கூட்டணி ஆட்சி அமைந்ததும், நிச்சயமாக அனைத்தையும் நிறைவேற்றித் தருவோம் என்று தெரிவித்து, உதயசூரியனுக்கும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்கும் வாக்களித்து வெற்றி தேடித்தருமாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

### மாநில உரிமைகளை பறித்திடும்

# மக்கள் விரோத பா.ஜ.க.வுக்கு பாடம் புகட்டுவீர்!

## சிவகங்கை தொகுதியில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கிராமம், கிராமமாகப் பிரச்சாரம்!

*சிவகங்கை. மார்ச் 31.*

சிவகங்கை பாராளுமன்ற தொகுதியில் இந்தியா கூட்டணி சார்பில் சார்பில் காங்கிரஸ் கட்சி வேட்பாளராக கார்த்தி ப. சிதம்பரம் போட்டியிடுகிறார். அவரை ஆதரித்து திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் பாரிவள்ளல் எஸ். புதூர் , சிங்கம்புணரி , திருப்பத்தூர், கோட்டையூர், ஆகிய ஊர்களில் மாவட்ட கழகச் செயலாளரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர். பெரிய கருப்பன் தலைமையில் கூட்டணி கட்சியினர் பங் கேற்ற செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் முன்னாள் ஒன்றிய நிதி யமைச்சர் ப. சிதம்பரம் எம்.பி, முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், எஸ். மாங்குடி எம்.எல்.ஏ. முன்னாள் எம்.எல்.ஏ. ராம.அருணகிரி, மாவட்ட தி.மு.க.அவைத் தலைவர் அ.கணேசன், மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கை .மாறன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் பி. செல்வராஜ், பூமணி, கே. பாலசுப்பிர மணியன், எஸ். சண்முக வடிவேல், விராமதி மாணிக்கம், கே. ஆர். ஆனந்த் சுப. சின்னதுரை, பொதுக்குழு உறுப்பினர்கள் அம்பலமுத்து பள்ளத்தூர் கே. எஸ். ரவி. பேரூர் கழகச் செயலாளர்கள் கதிர்வேல், கார்த்திகேயன், பகுருதீன்அலி, அசோக், ராசு,கே.பி.எஸ். .பழனியப்பன், இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தார்கள்.

இந்த கூட்டத்தில் கலந்துகொண்டு மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர். பெரிய கருப்பன் பேசியதாவது.

தமிழகத்தில் தேர்தல் களத்தில் மூன்றுஅணிகள் களத்தில் உள்ளது .மூன்று அணிகளில் முதன்மையான தெரிவது நமது 'இந்தியா' கூட்டணியாகும். பா.ஜ.க.அ.தி.மு.க போட்டியிடுவது கள்ள கூட்டணி ஆகும். இந்தியா கூட்டணியானது கொள்கை ரீதியான கூட்டணியாகும். 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சி 10 ஆண்டுகால பாஜ.க ஆட்சியின் ஊழல்கள் பட்டியலிட முடியாத அளவுக்கு அமைந்துள்ளது. மக்கள் விரோதமாக இரண்டு ஆட்சிகளும் நடைபெற்றது. இதை நாம் மக்களிடம் எடுத்துக் கூற வேண்டும்

இந்தியா கூட்டணி தமிழகத்தில் முதல்வர் தளபதி அவர்கள் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இதற்கு இணையாக இந்தியாவில் எந்த கூட்டணியும் செயல்பட வில்லை. ஒன்றிய பா.ஜ.க. அரசியல் சட்டத்தின்படி நடைபெற வில்லை. மக்களின் விருப்பத்தினை நிறைவேற்றிடும் வகையிலும் செயல்பட வில்லை. சர்வாதிகார ஆட்சி நடைபெறுகிறது. இது தொடரக்கூடாது.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை முதல்வர் அறிவித்த பொழுது இது கொடுக்க முடியுமா என்று கேட்டார்கள். இன்று ஒரு லட்சத்து 15 ஆயிரம் மகளிருக்கு இந்த உரிமைத். தொகை மாதம்தோறும் வழங்கப்பட்டு வருகின்றது. மொத்தம் ஒரு லட்சத்து 65 ஆயிரம் விண்ணப்பங்கள்பெறப்பட்டுள்ளது. மீதி உள்ள விண்ணப்பங்கள் பரிசிலனையி ல் உள்ளது. அந்த மனுக்கள் பரிசீலனை முடிந்ததும் அனைவருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படும். இதற்காக முதல்வர் அவர்கள் ருபாய் 1200கோடி நிதியினை ஒதுக்கீடு செய்துஉள்ளார்.

10 ஆண்டு கால அ.தி. மு.க. ஆட்சியில் பல்வேறு ஊழல்கள் நடைபெற்றது. நிதி நெருக்கடியினை ஏற்படுத்தி சென்றார்கள். ருபாய் 60ஆயிரம் கோடிக்குமேல் கடன் சுமையை வைத்து விட்டு சென்றார்கள். அதையெல்லாம் கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழக முதல்வர். அவர்கள் சீரமைத்து மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங் களை தினமும் செயல்படுத்தி வருகிறார்.மத்தியில் மாநில அரசின் உரிமையைப் பறிக்கும் மக்கள் விரோத அரசு நடைபெற்று வருகிறது. இது மாறவேண்டும்.

எனவே மத்தியில் நிலையான மதச்சார்பற்ற ஆட்சி அமைய இந்தியா கூட்டணியை நாம் ஆதரிக்க வேண்டும்.

சிவகங்கை தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளரை ஆதரித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் பேசினார்.

**ப.சிதம்பரம் பேச்சு!**

கூட்டத்தில் கலந்து கொண்டு முன்னாள் ஒன்றிய நிதி நிதியமைச்சர் ப. சிதம்பரம் எம்.பி. பேசியதாவது.

இந்தியா ஒரே நாடாக இந்துத்துநாடாக இருக்க வேண்டும் என்று பா.ஜ.க. விரும்புகிறது ஒரே மொழி அதுவும் இந்தி மொழி, இந்து மதம் ,ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பதை வலியுறுத்தி வருகிறது. இந்தியநாடு பன்முகத்தன்மை கொண்ட நாடாகும். பா.ஜ.க. விரும்பியவாறு அமைந்தால் தமிழ் தெலுங்கு கன்னடம் ஆகிய மொழிகள் அழிக்கப்படும். கலாச்சாரங்கள் ஒழிக்கப்படும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட டெல்லி முதல்வர் கைது செய்யப்படுகிறார். இது ஒரு தவறான ஜனநாயக விரோதமான செயலாகும். மத்திய அரசு நினைத்தால் யாரையும் கைது செய்யலாம் என்றால் இது தவறானதாகும். பா.ஜ.க. ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் கவர்னரை நியமித்து பலவழியில் இடையூறுகளை செய்துவருகிறார்கள். உச்ச நீதிமன்றம் அமைச்சர் பொன்முடி வழக்கில் தடைவிதித்துள்ளது. அவர் சட்டமன்ற உறுப்பினராக தொடரலாம் என்று கூறி உள்ளது. ஆனால் தமிழகத்தில் இதை ஆளுநர் செயல்படுத்த மறுக்கிறார் உச்சநீதிமன்றம் ஆளுநருக்கு குட்டு வைத்த பிறகு பொன்முடிக்கு அமைச்சராக பதவி பிரமாணம் செய்து வைக்கிறார்.

டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் இடிதுறையால் அமலாக்கத் துறை கைது செய்யப்படுகிறார். வழக்கின் முகாந்திரம் இன்னும் இதுவரை என்னவென்றே தெரியவில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு முதல்வரை அமலாக்கத்துறை கைது செய்வது சட்டவிரோத ஜனநாயகமற்ற செயலாகும். பா.ஜ.க.ஆட்சி யில் இல்லாத மாநில முதல்வர்களுக்கு இது ஒரு எச்சரிக்கையாக அமைந்துள்ளது. தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்களிடம் எனக்கு இரண்டு விஷயங்கள் மிகவும் பிடித்தமானதாகும். இதில் முதலாவது அவர்பதவி ஏற்ற நாள் முதல் மூன்று ஆண்டுகளில் பல்வேறு மக்கள்நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். கலைஞர் மகளிர் உரிமைத். தொகை, பெண்களுக்கான இலவச பயண பேருந்து, கல்லூரி மாணவிகளுக் கான புதுமைப்பெண் திட்டம் போன்ற பல்வேறு மக்கள் நலத்திட்டங் களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்.

இரண்டாவதாக பிரதமர் மோடியை பா.ஜ.கவை எதிர்ப்பதில் அவர் முதல் நபராக உள்ளார். தலைவர் ராகுல் காந்தி உடன் சேர்ந்து ஸ்டாலின் அவர்களும் பா.ஜ.கவையும் மோடியை தொடர்ந்து எதிர்ப்பது பாராட்டுக்குரியதாக உள்ளது. இத்தகைய பாசிச விரோத பா.ஜ.க.ஆட்சியை நாம் விரட்ட வேண்டும். அதற்கு அனைவரும் இந்தியா கூட்டணியை ஆதரிக்க வேண்டும். இவ்வாறு ப. சிதம்பரம் பேசினார் .

இந்த கூட்டத்தில் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் முன்னாள் எம்.எல்.ஏ. வி.பி.ராசன், ஒன்றிய பேரூர் நிர்வாகிகள் இராம. ரவி, ஷாஜகான், சிவபுரி சேகர், அலாவுதீன் குடோன்மணி, பாஸ்கரன், செல்வகுமார், ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், மாவட்ட சுற்று சூழல் அணி தலைவர் அ. வல்லபாய், மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, மாவட்ட சிறுபான்மை நல பிரிவு அமைப்பாளர் என்.எம்.சாக்ளா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார் சன்சீமான்சுப் பையா, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன்,வர்த்தக அணி ருக் மாசரவணன்,விஜய்,

மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் எஸ். எஸ். அருணாச்சலம், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் சண்முகநாதன், தொ.மு.ச. சண்முகநாதன், பேரூராட்சி மன்றத் தலைவர்கள் கோகிலராணி நாராயணன், திருமதி ராதிகா, கார்த்திக் சோலை, துணைத்தலை. வர் கான்முகமது,பொருளாளர் ஏ.எம். கண்ணன், இளைஞரணி வைகைமாறன், மனோகரன், தகவல் தொழில்நுட்ப அணி காளிமுத்து, புதூர் கண்ணன், தாஸ், சேவியர், சோமசுந்தரம், திருநாவுக்கரசு, பிளாசா சேகர் உட்பட இண்டியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



சிவகங்கை மாவட்டம் கல்லல் ஒன்றிய அளவிலான இண்டியா கூட்டணி செயல்வீரர்கள் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் பேசினார். உடன் ப.சிதம்பரம் எம்.பி. வேட்பாளர் கார்த்திக் ப.சிதம்பரம் எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார் எஸ்.மாங்குடி, சிவகங்கை தொகுதி தேர்தல் பொறுப்பாளர் கே.முருகவேல்,கல்லல் ஒன்றிய செயலாளர் நா.நெடுஞ்செழியன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

### தென்காசி கழக வேட்பாளர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார்

# சங்கரன் கோவிலில் கிராமம் கிராமமாகச் சென்று வாக்கு சேகரிப்பு!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் பிரச்சாரம்!

*தென்காசி.மார்ச்.31-*

தென்காசி மக்களவைத் தொகுதி இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமாரை ஆதரித்து திறந்த வேனில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம். எல்.ஏ. தலைமையில் கிராமம் கிராமமாக சென்று தீவிர பிரச்சாரம் நடைபெற்றது.

தொடர்ந்து சங்கரன் கோவில் நகரப் பகுதியிலும் தீவிரமான பிரச்சாரம் மேற்கொண்டனர்.

கடந்த 26 ஆம் தேதி தென்காசி மக்களவைத் தொகுதி கழக வேட்பாளர் ராணி ஸ்ரீகுமார் தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

அதனைத் தொடர்ந்து தினசரி பொதுமக்களிடத்தில் தீவிர வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்.

அதன்படி வாசுதேவநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட சங்கரன்கோவில் வடக்கு ஒன்றியம் கழக வேட்பாளர் ராணி ஸ்ரீகுமார் அவர்களின் சொந்த ஊரான குவளைக்கண்ணி கிராமத்தில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ.தலைமையில் தெருத்தெருவாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். ஊரே திரண்டு வந்து அவருக்கு சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

பின்னர் கரிவலம்வந்த நல்லூர் மெயின் பஜாரில் வியாபாரிகளிடமும், பொதுமக்களிடமும் வாக்கு சேகரித்தனர்.

அதனைத் தொடர்ந்து சென்னிகுளம் கிராமத்தில் வாக்கு சேகரிக்கும் பணியில் ஈடுபட்டனர்.அங்கு அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. முன்னதாக அங்குள்ள காவடிச்சிந்து புகழ் அண்ணாமலை கவிராயர் அவர்களின் முழுதிருஉருவ சிலைக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ. கழக வேட்பாளர் ராணி ஸ்ரீகுமார் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அதன் பின்னர் சங்கரன்கோவில் மெயின் சாலையில் உள்ள சிறு வணிகர்கள், பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள ஆட்டோ நிறுத்தம், எலுமிச்சம் மார்கெட்,மற்றும் முக்கிய தெருக்களில் வாக்கு சேகரித்தனர்.

கழுகுமலை சாலையில் உள்ள ஜிம்மா பள்ளிவாசல் அருகில் தொழுகை நடத்தி விட்டு வெளியே வந்த இஸ்லாமிய மக்களிடம் தீவிரமாக வாக்கு சேகரித்தனர்.அவர்கள் உதயசூரியன் சின்னத்தை காண்பித்து தங்களது ஆர்வத்தை வெளிப்படுத்தினர்.

இந்நிகழ்வுகளில் முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் ராசா என்ற ராசையா, ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கர பாண்டியன், வெள்ளத்துரை,நகரச் செயலாளர் பிரகாஷ்,மாவட்ட பிரதிநிதி செய்யது அலி, மாவட்ட தொண்டரணி அப்பாஸ் அலி,மாணவரணி அமைப்பாளர் உதயகுமார், துணை அமைப்பாளர் வீரமணிகண்டன், வீராசாமி,வெங்கடேஷ், தகவல் தொழில்நுட்ப அணி ரஜினிகாந்த், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் மதி மாரிமுத்து, தலைமை பொதுக்குழு உறுப்பினர் தேவதாஸ்,

மாவட்ட பிரதிநிதிகள் கோமதிமுத்துபுரம் அழகையா,ரவி ஸ்தேவான், குவளைக்கண்ணி ஊராட்சி மன்ற தலைவர் தினேஷ், பத்மநாதன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தங்கவேலு, ஒன்றிய துணைச் செயலாளர் மாரியப்பன்,வழக்கறிஞர் முனியசாமி, கிருஷ்ண மூர்த்தி, ஒன்றிய குழு உறுப்பினர் இருளப்பன், அமைப்பு சாரா ஓட்டுநரின் தலைவர் முருகேசன், வயலி ஊராட்சி மன்ற தலைவர் கருணாநிதி மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் பிரபாவதி, ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளர் கோமதி கந்தசாமி,ஒன்றிய சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பழனிவேல் ராஜன், அபிநயா பர்னிச்சர் தனசேகரன், குவலைக்கண்ணி கிளைக் கழக செயலாளர் அப்பாதுரை,ஒன்றிய பிரதிநிதி ஆரோக்கியம்,முன்னாள் மாவட்ட கவுன்சிலர் சண்முகத்தாய், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர்கள் முத்துகிருஷ்ணன், மாரியப்பன், செவல்பட்டி கிளைக் கழகச் செயலாளர் குமார், ஒன்றிய பிரதிநிதி சின்னச்சாமி, சின்ன ஒப்பனையால்புரம் கிளைக் கழக செயலாளர் ராசு,சிவலிங்கபுரம் கிளைக் கழகச் செயலாளர் கனித்துறை மகேஷ் குமார்,தகவல் தொழில்நுட்ப அணி செல்வின் ஞானப்பிரகாஷ்,ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் நம்பிராஜன்,ராம் சுந்தர், திருமுருகன், யோகேஷ்குமார்,அய்யனார், பனையூர் பத்மநாதன்,சென்னிகுளம் ஊராட்சி மன்ற தலைவர் சரவணப்பெருமாள், சுப்புலாபுரம் ஒன்றிய கவுன்சிலர் பார்வதி,சுப்புலாபுரம் கிளைக் கழகச் செயலாளர் அருளானந்தம், கிளைக் கழக செயலாளர் முரு கேசன், சுப்பிரமணிய புரம் கிளைக் கழக செயலாளர் முருகன்,பரமசிவன் ஆறுமுகம், அய்யனார், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முருகன், சென்னி குளம் முருகன், மகளிர் அணி செல்வி கனகராஜ் உள்பட இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள்,தி. மு.க. மாவட்ட,ஒன்றிய, நகர, பேரூர்,கிளைக் கழக நிர்வாகிகள்,ஊர் மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி தேர்தல் பிரச்சாரச் சுற்றுப் பயணம்!



**01.04.2024 ( திங்கட்கிழமை )**

**திருநெல்வேலி**

| நேரம் | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| மாலை 4.00 | இராதாபுரம் (திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்) | பெருந்தலைவர் காமராஜர் சிலை அருகில், வள்ளியூர் |

**கன்னியாகுமரி**

| நேரம் | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| மாலை 4.30 | கன்னியாகுமரி | குழித்துறை அண்ணா சிலை |
| மாலை 5.30 | | புதுக்கடை பேருந்து நிலையம் |
| மாலை 6.15 | | குளச்சல் பீச் முக்கு |
| மாலை 7.00 | | நாகர்கோவில் வடசேரி அண்ணா சிலை |
| மாலை 7.45 | | கொட்டாரம் ஜங்ஷன் |



தென்காசி மக்களவைத் தொகுதி கழக வேட்பாளர் மருத்துவர்.ராணி ஸ்ரீகுமார் சங்கரன்கோவில் மெயின் பஜாரில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் திறந்த ஜீப்பில் இருந்தபடி வாக்கு சேகரித்தார். தொடர்ந்து சிறு சிறு வியாபாரிகளை சந்தித்தும்,பள்ளிவாசலில் தொழுகையை முடித்துவிட்டு வெளியே வந்த இஸ்லாமியர் மக்களிடம் வாக்கு சேகரித்தார். நிகழ்வில் நகர செயலாளர் பிரகாஷ், செய்யதுஅலி, அப்பாஸ் அலி, உதயகுமார், வீரமணிகண்டன், வீராசாமி, வெங்கடேஷ், ரஜினிகாந்த், காவல்கிளி உள்பட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் ரளாக கலந்து கொண்டனர்.

### முதல்வரின் சாதனையால் - தி.மு.க. கூட்டணி வேட்பாளர்கள்

# அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி பேச்சு!

*மதுரை, மார்ச் 31-*

மதுரை கிழக்கு தொகுதி ஒத்தக்கடையில் தேர்தல் பணிமனையை திறந்து வைத்த மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மக்கள் சாதனை நாடு போற்றக்கூடியது, இதனால் 'இந்தியா' கூட்டணி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் சு.வெங்கடேசன் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவார் என தெரிவித்தார்.

மதுரை நாடாளுமன்ற 'இந்தியா' கூட்டணியின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் சு. வெங்கடேசனை ஆதரித்து அரிவாள் சுத்தியல் நட்சத்திரம் சின்னத்தில் வாக்குகள் சேகரிக்கும் பணியும் தேர்தல் பணிமனை அலுவலகங்கள் திறக்கும் பணியும் துரிதமாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில் மதுரை கிழக்கு தொகுதி, கிழக்கு ஒன்றியம் யா.ஒத்தக்கடையில் மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.மூர்த்தி தேர்தல் பணிமனையை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார்.

அப்போது பேசிய அவர் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, பெண்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணம், மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு நிதி உதவி, கல்லூரி மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டம் என பல்வேறு முத்தான திட்டங்களை செயல்படுத்தி நடைமுறைப்படுத்தி வருகிறார். இதனால் நாளுக்கு நாள் பெண்கள் பொது மக்களின் ஆதரவு பெருகி வருகிறது.

மதுரை கிழக்கு தொகுதியில் நூறு குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு வரு கின்றன, குடிநீர் தட்டுப்பாடு இல்லை என்ற நிலை உள்ளது. இதேபோல் சாலை வசதி, பள்ளிகளுக்கு கூடுதல் கட்டிட வசதி, ரேஷன் கடை என பல்வேறு திட்டங்களும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.



ஒத்தக்கடையில் சாக்கடை பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் ரூபாய் 82 கோடி ஒதுக்கப்பட்டு பாதாள சாக்கடை அமைக்கும் பணி தேர்தல் முடிந்தவுடன் துவக்கப்பட உள்ளது. ஒத்தக்கடை ஒரு நகரம் போல் மாற்றப்பட்டு தன்னிறைவு பெற்ற ஊராக மாறும். தொடர்ந்து இந்த பகுதி மக்கள் ஆதரவு கொடுத்ததால் சென்ற முறை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் சு.வெங்கடே சன் வெற்றி பெற்றார், இம்முறையும் தேர்தலில் அதைவிட பல மடங்கு கூடுதல் வாக்குகள் பெற வேண்டும், பெருமையை சேர்க்க வேண்டும் இங்கு சு.வெங்கடேசன் வேட்பாளர் அல்ல தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தான் வேட்பாளர் என்பதை மனதில் கொண்டு அனைவரும் செயலாற்ற வேண்டும் இவ்வாறு பேசினார்

மேலும் இந்நிகழ்ச்சியில் மதுரை கிழக்கு ஒன்றிய செயலாளர் அ.பா.ரகுபதி, தொகுதி பொறுப்பாளர் பெருநாழி போஸ், செயற்குழு உறுப்பினர் வடிவேல் முருகன், கிழக்கு ஒன்றிய துணை சேர்மன் பாலாண்டி, ஊராட்சி மன்றத் தலைவர் அண்ணாமலை, அணிகளின் அமைப்பாளர்கள் வக்கில் கலாநிதி, ஒத்தக்கடை சரவணன், வக்கில் மூர்த்தி, மகுடபதி, இளைஞர் அணி வன்னிமுத்து, நிஷாந்த், பாண்டி, ஒன்றிய கவுன்சிலர்கள் போஸ், முத்து ராமன், பகுதி செயலாளர் பெ.சசிகுமார், வினோத், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொன்னுத்தாய் மற்றும் பலர் பங்கேற்றனர்.



விடுதலைப் போராட்ட வீரர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்களின் 264 வது பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று (30.03.2024) இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ, மற்றும் இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி, இராமநாதபுரம் நகர் மன்ற தலைவர் கார்மேகம், துணைத் தலைவர் பிரவீன் தங்கம், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் குணசேகரன் மற்றும் டாக்டர் குமார், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



# 2024 நாடாளுமன்றத் தேர்தல் ‘இந்தியா கூட்டணி’ வேட்பாளர்களை ஆதரித்து

கலைஞர் 100 1924 - 2023

# கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்

2024 ஏப்ரல் 19–அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ‘இந்தியா கூட்டணி’ வேட்பாளர்களை ஆதரித்து, தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குகளை சேகரித்து வருகிறார். அவரின் 2–வது கட்ட தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயண விவரம் வருமாறு:–

**31.03.2024, ஞாயிற்றுக்கிழமை**

| வ.எண் | நேரம் | இடம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | தெற்கு ரத வீதி, சிதம்பரம், கடலூர் கிழக்கு மாவட்டம் | சிதம்பரம் |
| 2 | காலை 11.30 மணி | சீமாட்டி சிக்னல், நான்கு முனை சந்திப்பு, கடலூர், கடலூர் கிழக்கு மாவட்டம் | கடலூர் |
| | | மதிய உணவு இடைவேளை | |
| 3 | மாலை 4.30 மணி | வில்லியனூர் கிழக்கு மாட வீதி சந்திப்பு, புதுச்சேரி, புதுச்சேரி மாநிலம். | புதுச்சேரி |
| 4 | மாலை 5.30 மணி | மரப்பாலம் சந்திப்பு, புதுச்சேரி, புதுச்சேரி மாநிலம். | புதுச்சேரி |
| 5 | இரவு 6.30 மணி | அண்ணா சதுக்கம், புதுச்சேரி, புதுச்சேரி மாநிலம். | புதுச்சேரி |



அன்பகம்
சென்னை – 18.
நாள் : 27–03–2024.

## அண்ணாமலை கனவு காணலாம் - ஆனால்

# கோவையில் கழக வேட்பாளரின் வெற்றி உறுதி!

## கனிமொழி கருணாநிதி திட்டவட்டம்!

கோவை, மார்ச் 31-

கோவையில் அண்ணாமலை கனவு காணலாம் அது அவரது உரிமை, ஆனால் நிச்சியமாக வெற்றி எங்களுடையது என கனிமொழி கருணாநிதி குறிப்பிட்டார்.

கோவை நாடாளுமன்ற வேட்பாளர் கணபதி ராஜ்குமார் ஆதரித்துத் தேர்தல் பரப்புரை மேற்கொண்டு வரும், திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி கோவையில் அவிநாசி சாலையில் உள்ள தனியார் விடுதியில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

திமுக கூட்டணி வேட்பாளர் கணபதி ராஜ்குமார் கோவையில் நிச்சயமாக வெற்றி பெறுவார் என்பது பிரச்சாரத்தில் தெரிகிறது எனவும் இரண்டாவது இடத்திற்குத் தான் போட்டி இருக்கும் என்பதும் தெளிவாகியுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

கடந்த மூன்றாண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழக அரசு மக்களுக்குச் செய்திருக்கின்ற திட்டங்கள் அனைத்தும் மக்களுக்குச் சென்றிருக்கிறது என்பதால் திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டணியில் இருக்கும் இந்தியா கூட்டணி ஒன்றியத்தில் உருவாக்க வேண்டும் பாஜக மீண்டும் எந்த பொறுப்புக்கும் வந்து விடக்கூடாது என்பதில் மக்கள் தெளிவாக இருக்கிறார்கள் என்றும் கூறினார்.

நிச்சயமாக இந்த கூட்டணி இங்கு மட்டுமின்றி தமிழகத்தில் போட்டியிடும் 40 இடங்களிலும் தெள்ளத் தெளிவாக இருக்கிறது எனக் குறிப்பிட்ட அவர், ஆயுஷ்மான் திட்டத்தில் ஒன்றிய அரசு ஒரே பெயரில் 10 லட்சம் பயனாளிகளை இணைத்திருப்பதைப் போல் எங்களுக்கு தெரியாது என்றும் மகளிர் உதவித் தொகையை ஒரு கோடியே 15 லட்சம் பெண்கள் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் அந்த திட்டம் மக்களைச் சென்று சேர்ந்திருக்கிறது என்றும் சுட்டிக்காட்டினார்.

இதேபோல் காலை உணவுத் திட்டம் மக்களுக்குப் பெரிய அளவில் சென்று இருக்கிறது என்றும் கூறினார். மேலும் தமிழகத்தில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்திருப்பதாகக் கூறிய அண்ணாமலையின் குற்றச்சாட்டு குறித்த கேள்விக்குப் பதிலளித்த கனிமொழி, போதைப்பொருள் தடுப்பு துறை மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் அதற்கு ஒன்றிய உள்துறை அமைச்சரகம் தான் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர்களுக்கு உதவுவதற்கு மாநில அரசு தயாராக இருக்கிறது என்றும் தெரிவித்தார்.

குஜராத்தில் தான் பல லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் அந்த துறைமுகம் யாருடையது என்பது அனைவருக்கும் தெரியும் என்றும் குறிப்பிட்டார்.

இதைப்போல் கோவையில் பா.ஜ.க. 60 சதவிகித வாக்குகள் பெற்று மிகப் பெரிய வெற்றியைப் பெறும் என்ற அண்ணாமலையின் கருத்து குறித்த கேள்விக்குப் பதில் அளித்த அவர் 60 வாங்கலாம் 90% கூட வாங்கலாம் எனவும் கனவு காண்பது அவரது உரிமை ஆனால் வெற்றி நிச்சயமாக எங்களது தான் என நம்பிக்கை தெரிவித்தார்.

ஒரு பைசா கூட ஓட்டுக்குச் செலவழிக்க மாட்டேன் என்று அண்ணாமலை கூறுகிறார் பின்னர் எதற்காக அவ்வளவு கோடிக்குத் தேர்தல் பத்திரங்கள் வாங்கினார்கள் என்றும் அவர் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம் நாங்கள் யாருக்கும் காசு கொடுத்து ஓட்டு வாங்க வேண்டிய அவசியம் கிடையாது.

முதலமைச்சர் திட்டங்களை நம்பித்தான் இங்கே வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டு இருக்கிறார்கள் அவர்கள் வெற்றி பெறுவார்கள் என்றார் கனிமொழி கருணாநிதி.



தேனி நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளர் தங்க தமிழ்ச்செல்வன் பெரியகுளம் தொகுதி மேல்மங்கலம் கிராமத்தில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார். உடன் சரவணகுமார் எம்.எல்.ஏ., ஒன்றிய துணைச் செயலாளர் பாஸ்கரன் அய்யன் ஆகியோர் உடன் இருந்தனர்.

## ஈரோடு, நாமக்கல், கரூர் தொகுதிகளின் வேட்பாளர்களை ஆதரித்து - இன்று

# முதல்வர் மு.க.ஸ்டாலின் சின்னியம்பாளையத்தில் உரையாற்றுகிறார்!

## ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை!

ஈரோடு, மார்ச் 31-

ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான சு.முத்துசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



நடைபெற இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலையொட்டி ஈரோடு, நாமக்கல், கரூர் ஆகிய தொகுதிகளுக்குட்பட்ட வாக்காளர்களிடம் வாக்குகள் சேகரிக்க முதலமைச்சரும், கழக தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (31.3.2024-ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணியளவில் ஈரோட்டில் இருந்து முத்தூர் சாலையில் உள்ள சின்னியம் பாளையத்தில் நடைபெறும் பாசிசத்தை வீழ்த்த இந்தியாவை காக்க ஸ்டாலின் அழைக்கிறேன் எனும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்.

அதற்காக 30.3.2024 அன்று சனிக்கிழமை இரவு சேலத்தில் பொதுக் கூட்டத்தை முடித்து விட்டு ஈரோடு பெருந்துறை ரோட்டில் உள்ள சக்தி சுகர்ஸ் விருந்தினர் விடுதியில் தங்குகிறார்.

எனவே இன்று (31.3.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை நடைபெறும் பொதுக்கூட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தோழர்கள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## வாணியம்பாடி பகுதியில்

# வேட்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் வாக்குச் சேகரிப்பு!

## மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. பங்கேற்றார்!

திருப்பத்தூர், மார்.31-

இந்தியா கூட்டணி சார்பில் வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் டி.எம்.கதிர் ஆனந்தை ஆதரித்து திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதி, ஆலங்காயம் பேரூராட்சி பகுதிகளில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். ஆலங்காயம் பேரூர் செயலாளர் ம.ஸ்ரீதர் தலைமை தாங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் டி.செங்குட்டுவன், வாணியம்பாடி நகரச் செயலாளர் வி.எஸ்.சாரதிகுமார், ஆலங்காயம் மேற்கு ஒன்றியச் செயலாளர் வி.எஸ்.ஞானவேலன், மாநில தொண்டரணி துணைச் செயலாளர் பி.எம்.முனிவேல், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தே.பிரபாகரன், ஆலங்காயம் ஒன்றியக்குழுத் தலைவர் சங்கீதாபாரி, ஆலங்காயம் பேரூராட்சித் தலைவர் தமிழரசி வெங்கடேசன், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் எஸ்.ராஜா மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

## சிவகங்கை நகரில் காங்கிரஸ் வேட்பாளருக்கு

# 10 ஆயிரம் வாக்குகள் கூடுதலாகப் பெற்று தருவோம்!

## ‘இந்தியா’ கூட்டணி நிர்வாகிகள் கூட்டத்தில் உறுதி! துரை.ஆனந்த் தலைமை!

சிவகங்கை, மார்ச். 31-

சிவகங்கை நகர் ‘இந்தியா’ கூட்டணி கட்சி நிர்வாகிகள் கூட்டம் நகர் கழகச் செயலாளர் சி.எம். துரை ஆனந்த் தலைமையில் நடைபெற்றது மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவர் சண்முகராஜன் வரவேற்றுப் பேசினார்.

இந்த கூட்டத்தில் ‘இந்தியா’ கூட்டணி கட்சி நிர்வாகிகள் பெரியார் ராமு ஆம்ஆத்மி, சேக் இந்திய தேசிய லீக், ராமச்சந்திர தேவர் மு.மு.க. உலகநாதன் சி.பி.எம். தீபன் ம.தி.மு.க. சேக் முகமது விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, புகழேந்தி தி.க. மருது, சி.பி.ஐ. விஜய் தியாகராஜன், காங்கிரஸ், கோபால், மக்கள் நீதி மையம் ஆகியோர் தேர்தல் பணி குறித்து பேசினார்கள்.

இந்த கூட்டத்தில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணி சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் கார்த்தி சிதம்பரத்திற்கு சிவகங்கை நகரில் மற்ற வேட்பாளர்களை விட கூடுதலாக 10 ஆயிரம் வாக்குகள் பெற்று தருவது என்று தீர்மானிக்கப்பட்டது.

நாளை ஏப்ரல்1ம் தேதி முதல் 27 வார்டுகளிலும் வீடு வீடாகச் சென்று தமிழக முதல்வர் தளபதி அவர்களின் கழக அரசின் மூன்றாண்டு சாதனைகளை விளக்கியும் பா.ஜ.க., அ.தி.மு.க ஆட்சியின்10 ஆண்டு கால மக்கள் விரோதம் மற்றும் ஊழல் குறித்து வீடு வீடாகச் சென்று விளக்கி கூறி ‘இண்டியா’ கூட்டணி வேட்பாளருக்கு வாக்குசேகரிப்பது மற்றும் திண்ணைப் பிரச்சாரம் செய்வது என்று முடிவு செய்யப்பட்டது. முடிவில் தமிழ் பிரியா நன்றி கூறினார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் ராஜபாண்டி, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் ராஜஅமுதன், நகர் ‘இண்டியா’ கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஜெயகாந்தன், விஜயகுமார், மதியழகன் ராமதாஸ், மதார் தேவஸ்தானம் முருகேசன், மகளிர் அணி மஞ்சுளா, சேது, தகவல் தொழில்நுட்ப அணி சதீஷ், இளைஞரணி அரிஹரன், சோமன், அ.சிதம்பரம், மோகன்ராஜ், உட்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



மதுரை மாநகர் மாவட்ட கழகம், ஆரப்பாளையம் 1 ஆம் பகுதிக்கு உட்பட்ட 58 வது வட்ட கழகத்தின் சார்பாக மதுரை நாடாளுமன்றத் தேர்தல் வெற்றி வேட்பாளர் சு.வெங்கடேசனை ஆதரித்து தேர்தல் பணிமனையை மதுரை மத்திய தொகுதி கழக தேர்தல் பார்வையாளர், டாக்டர். முன்னாள் அமைச்சர் சுந்தராஜன் தலைமையிலும், ஆரப்பாளையம் 1 ஆம் பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.எஸ்.மாறன், 58 அவது வட்டக் கழகச் செயலாளர் சீனி ரமேஷ் ஆகியோர் முன்னிலையில், மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். அவருடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.ஜெயராமன், மதுரை மாநகர் மாவட்ட கழக அவைத் தலைவர் ஒச்சு பாலு, துணைச் செயலாளர் சின்னம்மாள், கழக பொதுக்குழு உறுப்பினர்கள் மணிமாறன், வைகை எம்.பரமன், முத்து கணேசன், மாநில விவசாய அணி, தொழிலாளர் அணி செயலாளர், துணைச் செயலாளர், பாக்கியநாதன், மதுரை மாநகராட்சி சுகாதாரக்குழு தலைவர் ஜெயராஜ், மாநகராட்சி மண்டல தலைவர் முகேஷ் ஷர்மா, மதுரை மாநகர் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் துறை கோபல்சாமி, மதுரை மத்திய தொகுதி கழக தேர்தல் பொறுப்பாளர்கள் அருண்குமார் இ.எல்.பாலா, தாஸ், கோபால், பகுதிக் கழக பொருளாளர் பி.டி.ஆர்.கண்ணன், மாவட்டப் பிரதிநிதிகள் உருட்டி ரமேஷ்,பாண்டி, உதயகுமார், மாமன்ற உறுப்பினர் நூர்ஜஹான், கழக இளைஞர் அணி மற்றும் ஐ.டி. அணியைச் சேர்ந்த முத்துக்குமார், கார்த்திக், ரவி மற்றும் கம்யூனிஸ்ட் பகுதி செயலாளர் ஸ்டாலின், பாலுச்சாமி, விடுதலைச் சிறுத்தைகள் தோழர்கள் கலந்து கொண்டனர்.



‘இந்தியா’ கூட்டணி சார்பில் வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதி, ஆலங்காயம் பேரூராட்சி பகுதிகளில் வாக்குகள் சேகரித்தார். திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி பங்கேற்றார்.

## விடுதலைப் போராட்ட வீரர்கள் கனவு கண்ட இந்தியாவைத் தக்க வைக்க

# ‘இந்தியா’ கூட்டணியை அரியணையில் ஏற்ற ஆதரவு தாரீர்!

### பேராசிரியர் கே.எம்.காதர்முகைதீன் - எம்.எச்.ஜவாஹிருல்லா - சா.பீட்டர் அல்போன்ஸ் உள்ளிட்ட கட்சித் தலைவர்கள் வேண்டுகோள்!

சென்னை, மார்ச் 31-

விடுதலைப் போராட்ட வீரர்கள் கனவு கண்ட இந்தியாவைத் தக்க வைக்க ‘இந்தியா’ கூட்டணியை அரியணையில் ஏற்ற ஆதரவு தாரீர்” என்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் முகைதீன், மனித நேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. தமிழ்நாடு மாநில சிறு பான்மையினர் ஆணையத் தலைவர் சா.பீட்டர் அல்போன்ஸ், கிறிஸ்தவ நல்லெண்ண இயக்கத் தலைவர் முனைவர் இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ., சிறுபான்மையினர் நலன், கிறிஸ்தவ தேவாலயங்களில் பணி புரியும் உபதேசி யர்கள் நல வாரியத் தலைவர் திருமதி விஜிலா சத்தியானந்த், கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான், தமிழ்நாடு கிறிஸ்தவ சபைகளின் கூட்ட மைப்புத் தலைவர் லியோ நெல்சன் அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இந்தியாவை முகலா யர்கள் ஆண்டனர். ஆங்கிலேயர்கள் ஆண்டனர். சுதந்திரத்திற்காக போராடிய நமது மாபெரும் தலைவர்கள் நம்மை அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெறச்செய்து நமது தேசத்தை ஒரு சுதந்திர குடியரசாக உருவாக்கித் தந்தனர். மக்களாட்சி எனும் தீபம் அணைந்துவிடாமல் இருக்க உலகம் போற்றும் ஒரு அரசியல் சாசன சட்டம் தந்தனர். ஜனநாயக விழுமியங்களை கண்ணும் கருத்துமாக காக்க தன்னாட்சி சுதந்திர முள்ள ஜனநாயக நிறுவனங்களை கட்டமைத்தனர்.

1947 இல் குண்டூசிகூட செய்யமுடியாத நாடு. உள்நாட்டு உற்பத்தி ஒரு புள்ளிக்கும் கீழே. பசியும், பஞ்சமும், பெருந்தொற்று நோய்களும் நிரந்தரமாக இம்மண்ணில் குடியிருந்த காலம். குடிநீர் வசதி, சாலைகள், மருத்துவ மனைகள், கல்வி நிலையங்கள், துறைமுகங்கள், விமான நிலையங்கள், பெரும் தொழிற்சாலைகள் என எவ்வித அடிப்படை வளர்ச்சிக் குறியீடுகளும் இல்லாத காலம்.

சமூக நீதி, மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், பெண்ணுரிமை, பாலின சமத்துவம், பேச்சுரிமை, எழுத்துரிமை, வழிபாட்டு உரிமை, கருத்துச் சுதந்திரம், என்று எதைப் பற்றியும் அறியாத ஜனங்கள்.

**சமூக சுதந்திரத்திற்கான அடித்தளத்தை அமைத்தனர்!**

“வெந்ததை தின்போம், விதியழைத்தால் சாவோம் “என்று வாழ்ந்த மக்களுக்கு அரசியல் சுதந்திரத்தை பெற்றுத்தந்தனர் காந்தி, நேரு, காமராஜ் போன்ற தேசியத் தலைவர்கள். பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்கி அடிப்படை வசதிகளை ஏற்படுத்தினர். சமூக நீதிக்கான பெரும் போராட்டங்களை முன்னெடுத்த தந்தை பெரியார், அண்ணா, கலைஞர் போன்ற திராவிட இயக்கத்தலைவர்கள் சமூக சுதந்திரத்திற்கான அடித்தளத்தை அமைத்தனர். ஏ.கே. கோபாலன், ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட், ஜீவா, ஜோதிபாசு, கல்யாணசுந்தரம் போன்ற பொதுவுடமை இயக்கத்தலைவர்கள் அடித்தட்டு மக்கள், விவசாயிகள், விவசாய கூலித் தொழிலாளர்கள் மற்றும் பஞ்சாலைத் தொழிலாளர்கள் உட்பட அனைத்து உழைக்கும் வர்க்கத்தினரின் உரிமைகளுக்காகப் போராடி அவர்களுக்கு சட்டப்பூர்வமான பல உரிமைகளைப் பெற்றுத் தந்தனர். அன்னை இந்திரா காந்தி இந்தியாவை ஜனநாயக, சோசலிச, மதச்சார்பற்ற, இறையாண்மை உள்ள குடியரசாக அறிவித்தார்.

**உலகமே நம்மை வியக்கப் பார்த்தது!**

உலகின் மிகப்பெரிய செயல்படும் ஜனநாயகமாக மலர்ந்தோம். வங்கிகளை தேசியமயமாக்கினோம். பிரமாண்டமான பல பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்கினோம். தமிழ்நாடு சமூகநீதிக்கான கல்வி மற்றும் அரசுப் பணிகளில் இட ஒதுக்கீட்டை இந்தியாவுக்கே அறிமுகப்படுத்தியது. ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு உணவு, கல்வி, வேலை வாய்ப்புகளுக்கான உரிமைகளை “சட்டப் பூர்வமான உரிமைகளாக” அறி வித்தது. உற்பத்தியைப் பெருக்கி வேலைவாய்ப்புகளை அதிகப்படுத்தினோம். உலகமே நம்மை வியப்புடன் பார்த்தது.

தேசிய இயக்கமும், திராவிட இயக்கமும், பொதுவுடமை இயக்கமும் சில கொள்கைகளில் மாறுபட்டிருந்தாலும் சமூக ஒற்றுமையிலும், சமூக நீதியிலும், அடித்தட்டு மக்களுக்கான பொருளாதார பாதுகாப்பிலும் ஒத்த கருத்திசைவு கொண்டிருந்தனர்.

இந்த மாபெரும் இயக்கங்களின் தலைவர்கள் தங்களை முன்னிறுத்தாமல் நாட்டையும், மக்களையும் மட்டுமே முன்னிலைப் படுத்தி தியாக வாழ்வு வாழ்ந்தனர். கருத்து வேறுபாடுகளையும், கொள்கை முரண்பாடுகளையும் தனி நபர் விருப்பு வெறுப்புகளாக ஒருநாளும் கருதவில்லை. கொள்கைகளிலும், கருத்தியல்களிலும் வேறுபட்டு ஒரே தளத்தில் பயணிக்கும் உரிமைகளை கொண்டாடினார்கள். உரையாடல்கள் மூலம் மற்றவர்களின் பார்வைகளில் இருக்கும் நியாயங்களை புரிந்துகொள்ள ஆத்மார்த்தமாக முயற்சித்த னர். அந்தப் பார்வைகளில், அணுகுமுறைகளில் நியாயங்கள் இருந்தால் அவைகளை உவகையுடன் ஏற்றுக் கொண்டனர். ஒருவர், மற்றொருவரின் தியாகங்களையும் உழைப்புகளையும் மதித்தனர்.

இப்படிப்பட்ட தலைவர்களாலும், அவர்கள் தலைமையேற்று நடத்திய அரசியல் இயக்கங்களாலும் வழிநடத்தப்பட்ட இந்தியா ஜனநாயகப் பாதையில் வெற்றிநடை போட்டு, பெரும் முன்னேற்றங்களைக்கண்டது. குண்டூசிகூட செய்ய இயலாத நிலையில் இருந்த பாரதம் விண்ணில் செயற்கைக்கோள்களை ஏவியது. IITs, IIMs, IISc, ஒன்றிய அரசின் பல்கலைக்கழகங்கள் போன்ற உயர் கல்வி நிறுவனங்கள் உருவாகின.

ஆயுள் காப்பீட்டுக் கழகம், ஓ. என். ஜி.சி, இந்தியன் ஆயில், பாரத் ஹெவி எலக்டிரிக்கல்ஸ், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேசன் போன்ற 252 பொதுத்துறை நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. பல்லா யிரக்கணக்கான பட்டியல் இனமக்கள், மலைவாழ் மக்கள், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையின மக்கள் வேலை வாய்ப்புகளைப் பெற்றனர்.

மொழிவாரி மாநிலங்கள் உருவான பின்னர் மாநில அரசுகள் போட்டி போட்டுக்கொண்டு அடிப்படை வசதிகளைப் பெருக்கினர். முதலீடுகளை ஈர்த்தனர். வட இந்திய மாநிலங்கள் சாதி மத மோதல்களில் ஈடுபட்டு முன்னேற்றப்பாதைகளில் பயணிக்கத் தவறிய காலங்களில் தமிழ்நாடு உட்பட்ட தென்மாநிலங்கள் வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் கவனம் செலுத்தின. இந்தியாவின் தனிநபர் வருமானம் வேகமாக வளர்ந்தது. பொருளாதார உற்பத்தி கூடியது. ஏற்றுமதி பெருகியது. அந்நியச் செலவாணி இருப்பு அதிகரித்தது.

அரசு நிர்வாகம் தனக்கு விதிக்கப்பட்ட அதிகார எல்லைகளை கடந்த வேளைகளிலும், அதிகார வர்க்கம் எதேச்சதிகாரமாக நடக்க முற்பட்ட வேளைகளிலும், தனிமனித உரிமைகள் பாதிக்கப்பட்ட நேரங்களிலும் நமது அரசியல் சாசன சட்டம் உருவாக்கிய பாராளுமன்றங்கள், சட்ட மன்றங்கள், உச்ச நீதி மன்றம், உயர் நீதி மன்றங்கள், தேர்தல் ஆணையம் போன்ற தன்னாட்சி அமைப்புகள் தலையிட்டு, தவறுகளை சுட்டிக்காட்டி தகுந்த தீர்வுகளை வழங்கி வந்தன.

**ஒவ்வொரு கூரையும் சிதைக்கப்படுகிறது!**

கரையான் புற்றெடுக்க கருநாகம்குடிவந்ததுபோல் மோடியின் தலைமையிலான பா.ஜ.க. அரசு, ஆட்சிக்கு வந்தபின் நாம் உருவாக்கி வைத்துள்ள நம் லட்சிய தேசத்தின் ஒவ்வொரு கூரையும் சிதைக்க முற்பட்டுள்ளது.

ஜனநாயகத்தை பெரும்பான்மைவாதமாக மாற்ற முயற்சிக்கிறது. மொழியாலும், மதத்தாலும், மாநிலங்களாலும் பிரிந்திருந்த போதிலும் தேசத்தால் ஒன்றுபட்டிருந்த மக்களை மதம், சாதி, மொழி அடிப்படையில் பிரித்து வைக்கிறது. இட ஒதுக்கீடு, தொழிலாளர் நலச் சட்டங்கள் போன்ற முன்னெடுப்புகளால் அடித்தட்டு மக்கள் பெற்றுள்ள உரிமைகளை பறித்து அவர்களை ஆதிக்க சாதியினரிடமும், கார்ப்பரேட் பெருமுதலாளிகளிடமும் மீண்டும் அடிமைகளாக்க முயற்சிக்கிறது. ஏழைகளிடமிருந்து கல்வியைப் பிடுங்க முயற்சிக்கிறது. தேச உடமையாக்கப்பட்ட வங்கிகளில் இருக்கும் பொதுமக்களின் சேமிப்பை பெரும் முதலாளிகளுக்கு வராக்கடனாக வாரிவழங்குகின்றது. இயற்கை வளங்களை பன்னாட்டுக் கம்பெனிகள் கொள்ளையிட திறந்து விடுகின்றது.

பொதுத்துறை நிறுவனங்களை தனக்கு வேண்டிய பெருமுதலாளிகளுக்கு மலிவு விலையில் தாரை வார்க்கின்றது. மதச்சிறுபான்மை யினரை பெரும்பான்மை மக்களுக்கு எதிரிகளாகக் கட்டமைக்கிறது. ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்றழைக்கப்படும் செய்தி ஊடகங்களை முழுமையாக முடக்கிப்போட்டு, உண்மை நிலவரங்கள் மக்களுக்குத் தெரியாமல் பார்த்துக் கொள்கிறது.

**கூட்டாட்சித் தத்துவத்தின் ஆன்மாவை கொல்கிறது!**

கூட்டாட்சித் தத்துவத்தின் ஆன்மாவைக் கொன்று, பா.ஜ.க. அல்லாத மாநில அரசுகளை சித்திரவதை செய்து, அவற்றின் நிர்வாகத்தை முடக்கி, மாநில அரசுகளை நகர்மன்றங்களை விட கேவலமாக நடத்துகிறது.

மக்களது கடுமையான உழைப்பாலும், அம்மாநில அரசுகளின் சிறந்த நிர்வாகத்தினாலும் மாநில உற்பத்தித் திறனைக் கூட்டி வரிவருவாயினைப் பெருக்கிய தென்மாநிலங்களுக்கு ஒன்றிய வரித் தொகுப்பிலிருந்து அவர்களுக்கு தகுதியான நிதிப் பங்கீட்டை வழங்காமல் தங்களது அரசியல் விளைநிலங்களாக இருக்கும் சில வட இந்திய மாநிலங்களுக்கு வரைமுறையில்லாமல் வாரி வழங்குகிறது. வரிப் பங்கீட்டில் மாநிலங்களுக்கு உரிய பங்கினை வழங்காத வகையில் வரிகளை செஸ் மற்றும் சர்சார்ஜ் கட்டணங்களாக லட்சக்கணக்கான கோடிகளை வசூலித்து அதனது விருப்பத்திற்கேற்ப செலவழிக்கிறது.

**மனச்சாட்சியற்றவர்களை ஊக்குவிக்கிறது!**

உச்சநீதி மன்றம், உயர் நீதி மன்றம், தேர்தல் ஆணையம், பல்கலைக் கழகங்கள், லோக்பால், மனித உரிமை ஆணையம், திரைப்படத் தணிக்கைத்துறை, வருமான வரித்துறை, வருவாய் புலனாய்வுத் துறை, சி.பி.ஐ., தேசிய புலனாய்வு முகமை, வெளிநாட்டுத் தூதரகங்கள் என்று அனைத்து அரசு நிர்வாக அமைப்புகளிலும் தகுதியான நபர்களை நியமிக்காமல், தங்களது அரசியல் தத்துவங்களுக்கு நெருக்கமானவர்களையும், தங்களது பதவிகளில் நீடிப்பதற்கும், பதவி உயர்வுக்கும் எதையும் செய்யத்துணியும் மனச்சாட்சியற்றவர்களை நியமித்து ஊக்குவிக்கிறது.

தமிழ்நாடு உள்ளடக்கிய தென்மாநிலங்களில் ஏற்படும் ஒன்றிய அரசு நிறுவனங்களின் வேலை வாய்ப்புகளை தமிழ்நாடு இளைஞர்களிடம் இருந்து பறித்து பின்வாசல் வழியாக வடமாநில இளைஞர்களை பணியமர்த்துகிறது.

மாற்றுச் சித்தாந்தங்களை உடையவர்களையும், சுதந்திரமாகச் செயல்படும் ஊடகவியலாளர்களையும், சமூக ஆர்வலர்களையும், தொண்டு நிறுவனங்களை நடத்துகின்றவர்களையும், பொய்வழக்குப் போட்டு பிணையில் வரமுடியாத வழக்குகளில் சிக்க வைத்து, விசாரணையின்றி வருடக்கணக்கில் சிறையிலடைக்கிறது.

மொத்தத்தில் நமது அரசியல் சாசன சட்டத்தை உயிரிழக்கச் செய்து, ஜனநாயகத்தை பாசிச பெரும்பான்மைவாதமாக மாற்றி, ஜனநாயக நிறுவனங்களை சிதைத்து நாம் போராடிப் பெற்ற ஜனநாயக குடியரசை ஒரு சர்வாதிகார அரசாக மாற்றும் முயற்சிகளில் ஒவ்வொருநாளும் ஈடுபட்டு வருகின்றது.

பல மதங்கள், பல மொழிகள், பல கலாச்சாரங்கள், பல இனக்குழுக்கள் இருந்தாலும் வேற்றுமைகளில் ஒற்றுமை கண்டு ஒரு பன்முகக் கலாச்சாரத்தை கொண்டாடும் நம்மிடம் ஒரு ஒற்றைக் கலாச்சாரத்தை திணிக்க அனைத்து முனைகளிலும் முயன்றுவருகிறது. “ஒரே நாடு, ஒரே மக்கள், ஒரே மொழி, ஒரே மதம், ஒரே கலாச்சாரம்” என்று நமது குடியரசின் ஆன்மாவைக் கொலை செய்ய திட்டமிடுகிறது.

இந்திய அரசியலில் “ஒற்றைக் கட்சியின்” ஆட்சியை ஏற்படுத்த திட்டமிடுவதால் மற்ற ஜனநாயக இயக்கங்களை அழிக்க முற்படுகிறது. காங்கிரஸ் இல்லாத பாரதம், கம்யூனிஸ்ட்கள் இல்லாத இந்தியா, கழகங்கள் இல்லாத தமிழகம் என்று இந்த தேசத்தைக் கட்டமைத்த ஜனநாயக இயக்கங்கள் அனைத்தையும் ஒழித்துவிட்டு பா.ஜ.க. கட்சியையும் இந்திய ஆட்சியையும் ஒரே அமைப்பின்கீழ் கொண்டு வர திட்டமிடுகிறது.

மோடி ஒவ்வொரு நாளும், பாராளுமன்றத்தில் தனக்கு 400 இடங்கள் வேண்டும் என்று தனது பரப்புரையில் சொல்வது இதற்காகத்தான். ஒரே நாடு ஒரே தேர்தல் என்பது சர்வாதிகார அரசுக்கு போடும் அச்சாரம். தேர்தல் முடிந்த பின்னர் தொகுதிகள் சீரமைப்பு என்ற போர்வையில் வட இந்திய மாநிலங்களின் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கூட்டவும், தென் மாநிலங்களின் உறுப்பினர்களைக் குறைக்கவும் திட்டத்தை பாஜக தயாராகவைத்துள்ளது. அப்படிப்பட்ட சூழ்நிலை உருவானால் தென் மாநிலங்கள் “காலனி மாநிலங்களாகவே” இருக்கும். டெல்லிக்கு வரிகட்டும் மாநிலங்களாக மட்டுமே வாழும்.

**‘இந்தியா’ கூட்டணி வென்றே தீர வேண்டும்!**

2024 நாடாளுமன்றத் தேர்தல் நமது வாழ்வுரிமைகளை நிர்ணயிக்கும் தேர்தல். பாரத மண்ணில் நாம் முழு சுதந்திரம் பெற்ற குடிமக்களாக இருப்போமா என்பதை முடிவு செய்யும் தேர்தல். ஜனநாயகம், சோஷலிசம், மதச்சார்பின்மை, மாநில உரிமை, சமூகநீதி, பன்முகக் கலாச்சாரம், நம் தாய்மொழி என்று நாம் கொண்டாடும் அத்தனை விழுமியங்களையும் மதத்தின் பெயரைச் சொல்லி மண்ணுக்கு கீழே புதைக்க நினைக்கும் சனாதன வருணாசிரம சதியினை வேரோடும் வேரடி மண்ணோடும் அகற்றுவதற்கான தேர்தல் இந்த தேர்தல். இதில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியின் நாற்பது இடங்களையும் இந்தியா கூட்டணி வென்றே தீரவேண்டும்.

**முதல்வர் மு.க.ஸ்டாலினின் கொள்கை முழக்கம்!**

பா.ஜ.க. முன்னெடுக்கும் மதவாத அரசியலுக்கு சரியான மாற்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், தமிழக முதலமைச்சருமான தளபதி ஸடாலின் அவர்கள் முன் வைக்கும் “திராவிட மாடல் அரசு” என்பதே. அதற்கு அவர் தரும் அற்புத விளக்கமான “அனைவருக்கும், அனைத்தும்” என்பதில் இந்தியா கூட்டணிக் கட்சிகளுக்கும் முழுமையான உடன்பாடு. மகாத்மா காந்தி சொன்ன “கடையனுக்கும் கடைத்தேற்றம்” என்பதின் எதிரொலிதான் அது. தேசத்தின் வளங்கள் யாவும் அந்த தேசத்தின் அனைத்து மக்களுக்கான பொதுவுடைமை என்ற மார்க்சிய சித்தாந்தத்தின் அடிநாதம் தான் “அனைவருக்கும் அனைத்தும்” என்ற கொள்கை முழக்கம்.

நாம் அடிக்கடி சொல்லி வருகின்ற “காமராஜர் ஆட்சி” என்பதின் மாற்று சொல்லாடல்தான் அது. திராவிடம் மக்களை பிளவுபடுத்தாது. பிறப்பில் வேற்றுமை பார்க்காது. வாய்ப்புகளை அனைவருக்கும் பகிர்ந்தளிக்கும். சாதி, மத மோதல்களை உருவாக்கி துவேஷப்பயிரை வளர்க்காது.

உழைக்கும் மக்களை ஒன்றிணைக்கும் அன்பையும், மனிதாபிமான அரசியலை போற்றி வளர்க்கும். சமூக நீதியைக் கொண்டாடும். மாநில உரிமைகளை விட்டுக்கொடுக்காது. ஜனநாயகத் தையும், ஜனநாயக நிறுவனங்களையும் அவற்றின் சுதந்திரத்தையும் பாதுகாக்கும்.

**டெல்லியிலும் திராவிட மாடல் அரசு!**

எனவேதான் டெல்லியிலும் “திராவிட மாடல் அரசு’ அமையவேண்டும் என்று சொல்கிறோம். அது தான் “ஆதிக்க அரசியலுக்கு” மாற்று.

தேர்தல் பத்திர நன்கொடைகள் பற்றிய தகவல்கள் இந்தியா மாபெரும் ஆபத்தினை நோக்கிப் பயணிக்கிறது. என்பதினை நமக்கு உணர்த்தியுள்ளது. சி.பி.ஐ., வருமான வரித்துறை, வருவாய் புலனாய்வுத் துறை என்ற பெரும் அதிகாரங்களைக் கொண்ட அமைப்புகளை, இந்த நாட்டின் பெரும் பணக்காரர்கள் மீது ஏவி, மிரட்டி, சிறையிலடைத்து, சித்திரவதை செய்து தங்களது கட்சிக்கு எவ்வாறு தேர்தல் நிதியினைக் குவித்துள்ளார்கள் என்று நாம் அறிய வருகின்ற தகவல்கள் இந்தியாவின் ஆன்மாவையே கலங்கடித்துள்ளன. இவ்வாறு குவிக்கப்பட்ட பெரும் நிதியால் தேர்தல்கள் மூலம் நமது நாட்டின் உயிர் மூச்சான ஜனநாயகத்தைக் கொலை செய்ய அவர்கள் போட்டுள்ள திட்டத்தை முறியடிக்க வேண்டும். “இந்தியா” கூட்டணி கட்சிகள் வெற்றி பெறுவதின் மூலமே அந்த பேரழிவைத் தடுத்து நிறுத்திட முடியும். அந்த வெற்றிக்கு தமிழகத்தின் பங்கு மகத்தானது.

உலக ஜனநாயக நாடுகளில், ஜனநாயகம் எப்படி உள்ளது என்பதை, ஆண்டு தோறும் வெளியிடும் VDem இன்ஸ்டிட்யூட்டின் “ஜனநாயக அறிக்கை 2024”, 2018 முதல் தேர்தல் எதேச்சதிகாரத்தில் இந்தியாவின் தொடர்ச்சியான சரிவை எடுத்துக்காட்டுகிறது. இது ஜனநாயகக் கொள்கைகள், குறிப்பாகக் கருத்துச் சுதந்திரம், ஊடக சுதந்திரம் மற்றும் உரிமையியல் உரிமைகள் ஆகியவற்றின் சரிவை எடுத்துரைக்கிறது. விமர்சனம் செய்யும் ஊடகவியலாளர்களைத் துன்புறுத்துதல் போன்ற நிகழ்வுகளுடன் ஊடக சுதந்திரம் முற்றிலும் நீர்த்துப்போகச் செய்யப்பட்டுள்ளது எனக் கூறுகிறது.

**சிவில் சமூக அமைப்புகள் மீது அச்சுறுத்தல்!**

மேலும், சிவில் சமூக அமைப்புகள் மீது அச்சுறுத்தல் மற்றும் சிறுபான்மை மக்கள் மீது கட்டுப்பாடுகளை ஏவுதல், அதே சமயம் எதிர்க்கட்சிகளைத் துன்புறுத்துதல் மற்றும் அடக்குமுறை தந்திரங்களைத் தொடுத்தல், போன்றவை மோடி அரசின் அதிகார வன்மத்தை எடுத்துரைக்கிறது.

இது இந்தியாவுக்கும், இந்தியச் சிறுபான்மை மக்களுக்கும், ஜனநாயகத்தை நம்பும் 130 கோடி மக்களுக்கும் கொடுக்கப்பட எச்சரிக்கையாகவே பார்க்கப்பட வேண்டும்.

**அ.தி.மு.க. புறம் தள்ளப்பட வேண்டும்!**

விடுதலைப் போராட்ட வீரர்கள் கனவு கண்ட இந்தியாவைத் தக்க வைக்க இந்தியா கூட்டணியை அரியணையில் ஏற்ற வரும் நாடாளுமன்றத் தேர்தல் தரும் வாய்ப்பைத் தெளிவாக உறுதியாகப் பயன்படுத்திக் கொள்வோம். மதச்சார்பற்ற இந்தியாவை உத்தரவாதப்படுத்தும் ஒரே அணி “இந்தியா” கூட்டணி மட்டுமே. அதிமுகவும் அதிலிருந்து பிரிந்த கட்சிகளும், நாம் தமிழரும் இந்தத் தேர்தலில் புறம் தள்ளப்பட வேண்டியவை. என்பதையும் உறுதியாக நெஞ்சில் நிறுத்துவோம்.

ஜனநாயகத்தையும், சமூக நீதியையும், மதச்சார்பின்மையும் மாநில உரிமைகளையும், ஏழை எளிய மக்களின் நல்வாழ்வையும் கருத்தில் கொண்டு பாசிச, வகுப்புவாத, கார்ப்பரேட் பாஜக கூட்டணியையும், அதனோடு கள்ளக் கூட்டணியில் இருக்கும் அதிமுகவையும் தோற்கடிக்க தமிழக மக்கள் சபத மேற்க வேண்டும். இந்தியா கூட்டணி கட்சிகளுக்கு பெருவாரியான வாக்கினை அளித்து வெற்றி பெறச் செய்ய தமிழக வாக்காளப் பெருமக்களை அன்புடன் வேண்டுகிறோம்.

இவ்வாறு அவர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளனர்.


---


நாடாளுமன்றத் தேர்தல் - 2024

**தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, தேர்தல் பிரச்சாரம்!**

(திருத்தப்பட்டது)

**தலைமைக் கழகம் அறிவிப்பு**



2024 ஏப்ரல்-19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, அவர்கள் ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|
| 01.04.2024 (திங்கட் கிழமை) | கன்னியாகுமரி<br>திருநெல்வேலி |
| 02.04.2024 (செவ்வாய் கிழமை) | திருநெல்வேலி<br>தென்காசி |
| 04.04.2024(வியாழக் கிழமை) | மதுரை<br>தேனி |
| 08.04.2024 (திங்கட் கிழமை) | சென்னை தெற்கு |

“அண்ணா அறிவாலயம்”
சென்னை-18.
29.03.2024

தலைமைக் கழகம்,
தி.மு.க.



நாடாளுமன்றத் தேர்தல் - 2024

**‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தேர்தல் பிரச்சார சுற்றுப் பயணம்!**

**தலைமைக் கழகம் அறிவிப்பு**



2024 ஏப்ரல்-19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஊர்களில் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | | பிரச்சாரம் செய்யும் ஊர் |
|---|---|---|
| 02-04-2024 | - | திருவள்ளூர் |
| 03-04-2024 | - | திருத்தணி |
| 04-04-2024 | - | பூவிருந்தவல்லி |
| 05-04-2024 | - | அம்பத்தூர் |
| 06-04-2024 | - | இராணிப்பேட்டை |
| 07-04-2024 | - | காஞ்சிபுரம் |
| 09-04-2024 | - | வேலூர் |
| 10-04-2024 | - | மீஞ்சூர் |
| 11-04-2024 | - | செய்யார் |

மேற்குறிப்பிட்ட இடங்களைச் சேர்ந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள், இவரது பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 29.03.2024

தலைமைக் கழகம்,
தி.மு.க.



நாடாளுமன்றத் தேர்தல் - 2024

**‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி பொதுச் செயலாளர் ஈ.ஆர். ஈஸ்வரன் தேர்தல் பிரச்சாரம்!**



2024 ஏப்ரல் - 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி பொதுச் செயலாளர் ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பின்வரும் நாடாளுமன்றத் தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார்.

அதன் விவரம் பின்வருமாறு:

| தேதி | | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 02-04-2024 | - | பொள்ளாச்சி |
| 05-04-2024 | - | திருப்பூர் |
| 06-04-2024 | - | ஈரோடு |
| 08-04-2024 | - | கோயம்புத்தூர் |
| 11-04-2024 | - | சேலம் |



நாடாளுமன்றத் தேர்தல் - 2024

**‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் தி.வேல்முருகன், எம்.எல்.ஏ., தேர்தல் பிரச்சாரம்!**




2024 ஏப்ரல் - 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் தி. வேல்முருகன், எம்.எல்.ஏ., அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பின்வரும் நாடாளுமன்றத் தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார்.

அதன் விவரம் பின்வருமாறு:-

| தேதி | | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 03-04-2024 | - | விழுப்புரம் |
| 07-04-2024 | - | அரக்கோணம் |
| 09-04-2024 | - | வேலூர் |
| 10-04-2024 | - | தருமபுரி |
| 15-04-2024 | - | சிதம்பரம் |

# கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சிப் பேருரை கேட்க
## தருமபுரி மாவட்டம் - தடங்கத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் மக்கள் கடல் காணீர்!







கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.3.2024) தருமபுரி மாவட்டம், தடங்கம்பகுதியில் நடைபெற்ற ‘இந்தியா’ கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் தர்மபுரி வேட்பாளர் ஆ.மணி அவர்களையும், கிருஷ்ணகிரி வேட்பாளர் கோபிநாத் அவர்களையும் அறிமுகப்படுத்தி ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், அமைச்சர் பெருமக்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், அர.சக்கரபாணி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் செல்வகணபதி, தடங்கம் சுப்பிரமணி, பிரகாஷ், பழனியப்பன், மதியழகன், நாடாளுமன்ற உறுப்பினர் செந்தில் குமார், சட்டமன்ற உறுப்பினர் இராமச்சந்திரன், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் தங்கபாலு, ஒருங்கிணைந்த தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் ‘இந்தியா’ கூட்டணி நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

# கலைஞரும் நானும்

63



# “அண்ணா நூற்றாண்டு நூலகம் போனீங்களா?”

**சுந்தர் கணேசன்,**
**இயக்குநர், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்**

**“சிந்துவெளி விட்ட இடமும், சங்க இலக்கியம் தொட்ட இடமும் ஒன்று’ என்கிற வரலாற்றுப் பார்வை இப்போது கூர்மை அடைந்துள்ளது. அதற்கான களத்தை அமைத்தவர் கலைஞர்” என தனது நினைவுகளிலிருந்து கலைஞர் குறித்த எண்ணத்தைப் பகிர்கிறார் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் இயக்குநர் சுந்தர் கணேசன்.**

“பள்ளிச் சிறுவனாக இருந்த காலத்தில், எனது அப்பாவுடன் கலைஞர் பேச்சினைக் கேட்கச் சென்றிருக்கிறேன். கலைஞரின் பேச்சைப் புரிந்துகொள்வதில் எந்தச் சிரமமும் இருக்காது. எல்லா வயதினரையும் இணைக்கும் பேச்சு அவருடையது. தாத்தா காலத்தில் இருந்தே திராவிடப் பற்று கொண்ட குடும்பம் என்பதால், திராவிட இயக்கத் தலைவர்கள் குறித்த புரிதல் இருந்தது. அப்பா சாதாரண தொண்டர்தான் என்றாலும், நான் எனது அப்பாவிடம் ‘கலைஞரிடம் நாம பேசமுடியுமா?’ எனக் கேட்டிருக்கிறேன். அந்த நாட்களில் தூர்தர்ஷன் தொலைக்காட்சியில் அவர் பேசுகிறார் எனில், உட்கார்ந்து கேட்டு விட்டுத்தான் அடுத்த வேலைகளைச் செய்வேன். அந்த அளவுக்கு நிறைந்திருந்தவர் கலைஞர்.

## செம்மொழி மாநாட்டுக் களம்

பிறகு கல்லூரிக் காலங்களில் கலைஞரின் எழுத்துகளை வாசிப்பது இருந்தாலும், நேரில் சந்திப்பது குறித்தெல்லாம் யோசித்ததே இல்லை. ஆனால், ரோஜா முத்தையா நூலகத்தில் இணைந்த பின்னர், ஏதோ ஒரு வகையில் கலைஞருடன் பிணைப்பு உருவானது. கலைஞர் கேட்ட நூல்கள் வேறெங்கும் கிடைக்கவில்லை என்றால், ரோஜா முத்தையா நூலகத்தில் கிடைக்கும் என வருவார்கள். அவற்றைக் கொடுத்தனுப்புவோம்.

கலைஞர் அவர்களை முதன்முதலில் நேரில் சந்தித்த அனுபவம் செம்மொழி மாநாட்டுப் பணிகளின்போதுதான். செம்மொழி மாநாட்டு இலச்சினையில் சிந்துவெளிக் குறியீடுகளை இடம்பெறச் செய்திருந்தார் கலைஞர். அந்த முனைப்பே ஆச்சர்யமாக இருந்தது. தமிழ்நாட்டில் சிந்துவெளி ஆய்வுகள் குறித்த, சிந்தனை கூர்மை அடையாதபோதே, அதன் குறியீட்டினை செம்மொழி மாநாட்டு இலச்சினையில் கொண்டு வந்தார்.



செம்மொழி மாநாட்டில் ஏழாயிரம் சதுர அடியில் சிந்துவெளிக் கண்காட்சி அரங்கினை அமைக்கும் பணி எங்களுக்கு வந்தது. மாநாட்டின் போது, கண்காட்சியினை 15 நிமிடங்களுக்கு மேல் பார்வையிட்ட கலைஞருடன் நான் இருந்தேன். சிறு வயதில், என் அப்பாவிடம், கலைஞரை நேரில் சந்தித்துப் பேச முடியுமா? எனக் கேட்ட கேள்வி கண்முன் வந்தது.

கலைஞர் கேட்ட கேள்விகளுக்குப் பதில் அளித்துக் கொண்டு, அவருடன் உரையாடிக் கொண்டு இருந்த அந்த நேரம் வியப்பு, மகிழ்ச்சி என கலவையான உணர்வுகளுடன் இருந்தேன்.

**இதை நாங்கள் கேட்கவில்லை, அவராகவே அரசுக்கு அழுத்தம் கொடுத்தார். பொதுத் தேவைகள் குறித்து, யாரும் கோரிக்கை வைக்காமலேயே செய்ய வேண்டும் என்கிற பரந்த சிந்தனைதான் அதற்குக் காரணம் என்பேன்.**

## சிந்துவெளி ஆர்வம்

சிந்துவெளி குறித்த காட்சிகளில் இருந்து விளக்கங்கள் கேட்டார். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கேள்வி, “ஏழாயிரம் வருடங்கள் என எப்படிச் சொல்கிறீர்கள்?” என விளக்கம் கேட்டார். ஒரு இடத்தில் பெரிய குளம் ஒன்று அமைத்திருந்தோம். அதைப் பார்த்தவர் “இந்தச் செங்கல் தத்ரூபமாக இருக்கிறதே எங்கிருந்து கொண்டு வந்தீர்கள்?” என அவர் கேட்ட கேள்விகளுக்கு என்னை அறியாமலேயே பதில் சொல்லிக் கொண்டிருந்தேன். சிந்துவெளி குறித்த ஆய்வுகளில் கலைஞரின் ஆர்வமும் தீவிரமும் வியப்பளித்தன.

எங்கள் நூலகத்தில் சிந்துவெளி ஆய்வு மையத்தைத் தொடங்கி இருந்த நேரம் என்பதால், அவரைச் சந்தித்து நன்றி சொல்வதற்காகக் கல்வெட்டு ஆய்வாளர் ஐராவதம் மகாதேவன் அவர்களுடன் நானும் சென்றேன். அது குறித்து உரையாடிய கலைஞர், செம்மொழி மாநாட்டில் சிந்துவெளி குறித்த ஆய்வரங்கமும் கண்காட்சியும் நடைபெற உள்ளதைக் கூறினார்.

செம்மொழி மாநாட்டில் இருந்துதான் சிந்துவெளி குறித்த ஆய்வுப் பார்வை தமிழ்நாட்டில் அதிகரித்துள்ளது. அதற்குக் களம் அமைத்துக் கொடுத்தவர் கலைஞர். அந்த மாநாட்டில்தான் சிந்துவெளி ஆய்வாளர் ஆர்.பாலகிருஷ்ணன் விரிவான ஆய்வறிக்கையை முன்வைத்தார். ‘சிந்துவெளி விட்ட இடமும், சங்க இலக்கியம் தொட்ட இடமும் ஒன்றுதான்’ என்கிற ஆய்வு வெளிக்கு வலுவான களம் அமைத்த நிகழ்வு செம்மொழி மாநாடு. அதை அமைத்துக் கொடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

## நூலக நெருக்கடியும் தீர்வும்

எங்கள் நூலகத்துக்குத் திடீரென ஒரு நெருக்கடி உருவானது. நாங்கள் தற்போது இருக்கும் கட்டடத்துக்கான வாடகை நிர்ணயத்தை சம்பந்தப்பட்ட துறையிலிருந்து அதிகரித்துவிட்டனர். அவ்வளவு தொகையை வாடகையாகச் செலுத்துவதற்கு வாய்ப்பே இல்லை என்கிற நிலையில், முதலமைச்சராக இருந்த கலைஞரின் கவனத்துக்குக் கொண்டு சென்றோம். உடனடியாக துறை சார்ந்த அதிகாரிகளை அழைத்து, அந்த விவகாரத்தைக் கேட்டறிந்தது, எங்களுக்கு நிரந்தரமாக அந்த இடத்தை வாடகை இல்லாத வகையில் பயன்படுத்திக் கொள்ள ஏற்பாடு செய்தார்.

நூலகத்தை நடத்துவதில் இருந்த பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு, அதுவும் அவ்வளவு வேகமாக நடந்ததை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. அதையொட்டி, நானும், ஐராவதம் மகாதேவன் அவர்களும் சென்று அவருக்கு நன்றி கூறிவிட்டு, எங்கள் நூலகத்துக்கு வர அழைப்பு விடுத்தோம். அதற்குப் பதிலளித்த கலைஞர் “நான் உங்க நூலகத்துக்கு வர்றேன். நீங்க நான் கட்டியிருக்கிற அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தைப் பார்த்தீங்களா? கட்டாயம் போய் பார்த்துவிட்டு கருத்து சொல்லுங்கள்” என்றார்.

நூலகங்கள் குறித்து அவருக்கு மிகப்பெரிய கனவு இருந்தது. எவ்வளவு ஈடுபாடு கொண்டிருந்தார் என்பதை அப்போது கண்டுணர்ந்தோம். அதற்கான சான்றுகள்தான் எங்களுக்கான நிரந்தர இடம், அண்ணா நூற்றாண்டு நூலகம் ஆகியவை.

## அரசுக்குக் கட்டுரை


அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, ஒரு நாளிதழில் எங்களை நேர்காணல் செய்தனர். நூலகத்தின் நிலைமை குறித்துக் கூறுகையில், “அரசு உதவி செய்தால் மட்டுமே தாக்குப்பிடிக்க முடியும். அதனால், அரசின் உதவியை எதிர்பார்த்திருக்கிறோம்” என தெரிவித்திருந்தேன். அந்த நேர்காணலைப் படித்துவிட்டு, கலைஞர், ‘தினமணி’யில் கட்டுரை எழுதி இருந்தார். ‘ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் முயற்சிகளுக்கு அரசு உதவி செய்ய முன்வர வேண்டும்’ எனக் கூறி இருந்தார். இதை நாங்கள் கேட்கவில்லை, அவராகவே அரசுக்கு அழுத்தம் கொடுத்தார். பொதுத் தேவைகள் குறித்து, யாரும் கோரிக்கை வைக்காமலேயே செய்ய வேண்டும் என்கிற பரந்த சிந்தனைதான் அதற்குக் காரணம் என்பேன்.

எல்லீஸ் ஆர்.டங்கன் குறித்த ஆவணப் படத்தினை எடுத்தபோது, அவரிடமும் கருத்துக் கேட்கத் திட்டமிட்டோம். ஆனால், அப்போதைய சூழலில் அவரால் நேரம் ஒதுக்கமுடியவில்லை. அதனால், கலைஞரின் பதிவு இல்லாமல் அந்த ஆவணப்படம் வந்ததில் எனக்கு வருத்தம் இருந்தது. அந்த வருத்தத்தினை அவர் கையெழுத்து எழுத்துரு உருவாக்கத்தில் நேர்செய்திருக்கிறோம். கலைஞர் நூற்றாண்டுக் கொண்டாட்டத்தையொட்டி அமைக்கப்பட்ட குழு, அந்தப் பணியை எங்களுடன் செய்தனர். எங்களுக்குக் கிடைத்த பொன்னான வாய்ப்பு அது.

கலைஞர், தமிழ்நாட்டு அறிவுலகத்துக்குக் கொடுத்த படைப்புகள், கட்டமைப்புகள் ஏராளம். அதைப் பறைசாற்றும் வகையில், அவர் கையெழுத்து எழுத்துரு காலம்கடந்து நிற்கும்.

....பகிர்வார்கள்

## அறிவுத் துறைப் பிரச்சாரம்!




புதிய தலைமுறை தொழில் முனைவோர்களில் திராவிட இயக்கச் சிந்தனைகளை உள்வாங்கி, அதை உயர்த்திப் பிடிப்பவராக இருப்பவர் சுரேஷ் சம்பந்தம்.

தமிழ்நாட்டில் புதிய தொழில் முனைவோர்களை உருவாக்குவதில் ஆர்வம் கொண்டிருக்கும் இவர், அறிவுசார் தொழில்களை அடையாளம் காட்டுவதிலும், தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தை ஒரு டிரில்லியன் டாலர் மதிப்புகொண்ட பொருளாதாரமாக மாற்றுவதற்காகவும் ‘கனவு தமிழ்நாடு’ இயக்கத்தினை முன்னெடுத்து வருகிறார். இந்தக் ‘கனவு தமிழ்நாடு’ அமைப்பு - 2024 நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு, கூகுள் ஆவண வடிவத்தில் படத் தொகுப்பினை வெளியிட்டுள்ளது. அதில் இந்தியா ஒரே நாடு VS இந்திய ஒன்றியம் என்பதை எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் படங்களைக் காட்சிப்படுத்தியுள்ளனர்.

ஒரே கலாச்சாரம் எதிர் பன்முகக் கலாச்சாரம், ஒரு மத ஆதிக்கம் எதிர் அனைத்து மத நல்லிணக்கம், ஒரே மொழி எதிர் பல தாய்மொழிகள், ஒரே சிந்தனை எதிர் பல சிந்தனைப் போக்குகள், ஒற்றை அடையாளம் எதிர் அடையாளங்களில் பெருமிதம், ஒன்றிய அதிகாரக் குவிப்பு எதிர் மாநிலங்கள் பங்கீடு, கட்சிகள் மீது அச்சுறுத்தல் எதிர் பல கட்சி ஜனநாயக முறை, அரசியலமைப்புச் சட்டத்தை சிதைப்பது எதிர் அரசியலமைப்புச் சட்டத்தை வலுப்படுத்துவது என்கிற வகையில் பல படங்களை இணைத்து வெளியிட்டுள்ளனர்.


நடப்புத் தேர்தலில் எந்தக் கண்ணோட்டத்தைப் பெற வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளும் வகையில் இந்தப் படங்கள் உள்ளன. அறிவுத்துறையினர் மத்தியில் இந்த முயற்சி வரவேற்பினைப் பெற்றுள்ளது.

இணைப்பினைப் பார்க்க ஸ்கேன் செய்யவும்.

## ஃப்ளாஷ்பேக்



எம்.செல்வராஜ்



### ‘பகுத்தறிவு’ உடன் படம்!

1964-ஆம் ஆண்டு திருச்சி மாவட்டம், குளித்தலை தொகுதிக்கு ‘பகுத்தறிவுப் பகலவன்’ தந்தை பெரியார் அவர்கள், பகுத்தறிவுப் பிரச்சாரம் மேற்கொள்வதற்காக வருகை தந்திருந்தார். அப்போது, தி.மு.க.வில் இருந்தாலும் பெரியாரின் கூட்டம் என்பதால், கழகத் தொண்டர்களோடு அவரது பேச்சைக் கேட்கத் திரண்டு சென்றோம். இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் ஆரம்பக் கட்டத்தில் இருந்த காரணத்தால் பெரியாரின் உரை அதை ஒட்டி அமைந்திருந்தது. அப்படியான சூழலில், அவருடன் புகைப்படம் எடுத்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களோடு நங்கவரம் போராட்டத்தில் தொடங்கிய என்னுடைய கழகப் பயணம், இன்று வரை தொடர்கிறது.

–எம்.செல்வராஜ், குளித்தலை, திருச்சி.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### தமிழ்நாடு மகிழ்ச்சி விழா!

1968-ஆம் ஆண்டு டிசம்பர் 12-இல் மெட்ராஸ் மாகாணம் ‘தமிழ்நாடு’ எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டதற்கான மகிழ்ச்சி விழா சென்னையில் நடைபெற்றது. அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுத் திரும்பியது முதல் எந்தப் பொது நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளாமல் இருந்த பேரறிஞர் அண்ணா, அந்த நிகழ்ச்சியில்தான் முதன்முதலில் கலந்துகொண்டார். கலைஞர், ம.பொ.சி., ஆதித்தனார் உள்ளிட்டோரும் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

434

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.